சம

# காலம்

சமூக விஞ்ஞான அறிவியல்

மாத இதழ் 09 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RANJIT & CO SOLICITORS

**Empowered to Administer Oaths**

**N. Ranjithakumaran**
Solicitor

* Civil Litigation
* Criminal Litigation
* Asylum / Immigration
* Matrimonial Injunction
* Employment Law
* Conveyancing
* Traffic Matters
* Police Station Matters
* Welfare Matters
* Family Law
* Personal Injury
* Commercial Property
* Company Law
* Wills and Probate

**Tel: 020 8767 9717 (3 lines) | Fax: 020 8767 9684**
**Mobile: 07956 886 749 | 07802 485 958**

**E-mail: ranjit@joinnetuk.com**

182 MITCHAM ROAD
LONDON SW17 9NJ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை ஞானத்தை யாரிடம் எப்படிப் பெறுவது?





கலைஞானம் கற்றுப் பெறுவதா கேட்டுப் பெறுவதா அல்லது பார்த்து அனுபவித்துப் பெறுவதா? எல்லா மனிதர்களிடமும் இயல்பாகவே எழுகின்ற இந்தக் கேள்விக்குப் புறச்சந்தானக் குரவர்களில் ஒருவரான உமாபதி சிவம் அவர்கள் நண்ணிப் பெறுவது என்று விடை கூறுகிறார்.

யாரை நண்ணிப் பெறுவது என்ற அடுத்த கேள்விக்கு தான் வணங்கிய நல்ல யானைக் கன்று உருவத்திருமேனி கொண்ட இறைவனின் ஞானவடிவான பிள்ளையாரைத் தன் எழுதுகோலால் திருவருட்பயனில் எமக்கு விடையாக்குகிறார் உமாபதி சிவம் அவர்கள்.



**நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலைஞானம்**
**கற்கும் சரக்கு அன்று காண்.**

அற்புதமான பதில். ஞானவடிவான இறைவன்தான் கலைகளின் ஊற்று அவனை நெருங்க நெருங்க கலை ஞானமும் இயல்பாகவே பெருகிப் பெருகி மெய்ஞானம் தோன்றிடும் என்னும் பதில் தமிழர் கல்விக்கொள்கையின் அடித்தளத்தை விளக்குவதாக அமைகிறது.

தமிழரின் கல்வியின் நோக்கம் பட்டம் அல்ல பதவி அல்ல வருமானமும் அல்ல சமுகமேன்நிலையும் அல்ல உண்மையை மெய்யை உணர்தல் ஆகும். இந்த உண்மையை உணர்வதற்கு படித்தல் பெரியளவில் உதவாது. ஏனெனில் படிக்கப் படிக்க படிப்பே நான் என்கிற ஆணவ உணர்வை வளர்க்கக் கூடிய சாத்தியங்கள் நிறைய உண்டு. இதனால்தான் அறிவு பெருகிய பொழுது – "ஆறுகோடி மாயைகள் தோன்றின நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்" என திருவாசகத்தில் மாணிக்க வாசகர் எச்சரிக்கிறார்.

இந்நிலையில் ஆணவத்தைக் குறைக்க கன்மத்தை மாற்ற மாயையை உணர உதவக் கூடிய கலைஞானம் - கலைஞானத்தின் ஊற்றாக உள்ள இறைவனை நினைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கத் தேடத் தேடத்தான் எம்மில் வளரும். ஆகவே கலைஞானத்தை வளர்ப்பதற்கு ஒவ்வொரு மனிதனின் மனதுள்ளும் உள்ள இறைவனை அவன் காண வேண்டும். எமது மனதிலேயே வாழும் கடவுளை எமது மனதை எமது சிந்தனையால் நாமே தோண்டித் தோண்டித்தான் காண வேண்டும். இதனால்தான் தோண்டுதல் என்பதன் மற்றைய சொல்லான கல்லுதல் என்ற வினையடியை விளக்கும் கல்வி என்ற சொல்லையே படித்தல் என்பதைக் குறிக்கும் பெயரடியாக கல்வி என நம் முன்னோர் வைத்தனர்.

அத்துடன் புத்து என்பது நரகத்தைக் குறிக்கும் சொல் என்றும் புத்திரன் என்பது நரகத்தில் இருந்து தந்தையை விடுவிக்க தந்தையின் புண்ணியங்கள் குழந்தையாகியது என்பதைக் குறிக்கிறது என்றும் சதாஅவதானி புத்திரன் என்ற சொல்லுக்கு அவரது அகராதியில் தந்துள்ள விளக்கத்தையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இந்த விளக்கங்களுடன் படிக்கும் பொழுது தான்

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்
தந்தை எந்நோற்றான் கொல் என்னும் சொல்

என்கிற வள்ளுவத்தின் பொருள் விளங்கும். இவனைப் பிள்ளையாகப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என பிறர் பேச வைக்கும் வண்ணம் பிள்ளை வாழ வேண்டும் எனப் பிள்ளை தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமையை வள்ளுவர் மிக அழகாக எடுத்து விளக்குகிறார். இந்தப் பின்னணியில் தகப்பன் செத்தால் மூத்த மகன் அவனது சிதைக்குத் தீ மூட்டும் மரபும் தோற்றம் பெற்றது. தந்தையை விடுவிப்பவன் மகன் என்ற கருத்தில் தந்தையின் பூதவுடலை விடுவிக்கும் செயலும் மகனால் மேற்கொள்ளப்படுகிறது. நம்மை தெரிந்து கொண்டால்தான் நம் பண்பாடும் எமக்கு விளங்கும்.

மேலும் பிள்ளைளுக்கு அவர்களது வாழ்வுக்குரிய உயர்படிப்பு தொழில் என்பவற்றைப் பெறுவதற்குரிய கல்வியை அளித்து விட்டால் போதும் பின்னர் அவர்கள் தங்களது ஆன்மீகச் சிந்தனையை இறைபக்தியை அவர்களே பலப்படுத்திக் கொள்வர் என்கிற எண்ணம் பல பெற்றோர் ஆசிரியர்களிடை உண்டு. அறிவு என்னும் கண்ணைப் பெற்றிட வேண்டும் சூரிய ஒளியில் இயங்கும் உலகின் தன்மைகளை அறிந்திடும் வல்லவராக வேண்டும் என இளையவர்களுக்கு நாம் வழிகாட்டுகின்றோம். ஆனால் முப்பது வயதுக்குள் ஒருவர் இறைவனுடன் தாள்தலையாக ஒன்றிப்பாரா அல்லது வினையால் மறுவாழ்வைத் தொடரப்போகின்றாரா என்பது முடிவாகி விடும். இதனை உணர்ந்து நாம் இளவயதிலேயே இறைஉணர்வில் ஆன்மீக அறிவில் இளையவர்கள் சிறந்திட வழிகாட்டுவதே ஏற்புடைய கல்வி பொருத்தமான கலைஞானம் என்பது திருமூலர் திருமந்திரம்.




கண்ணதும் காய்கதிரோனும் உலகினை
உள்நின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்
**விண்உறுவாரையும் வினைஉறுவாரையும்**
**எண்ணுறும் முப்பதில் ஈர்ந்து ஒழிந்தாரே!**

## அன்பான குடும்ப அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளப் புத்திக் கூர்மையடையச் செய்கிறது



**மிருகங்களும் பாசத்தைப் பொழிகின்றன**
**இந்நிலையில் மனிதக் குழந்தைகள்**
**பாசத்திற்கு ஏங்குவது இயல்பல்லவா!**



வறுமையில் அன்பின்றி வாடும் சிறுவர்களின் புத்திக் கூர்மையும் உடல் கட்டுமானங்களும் பாதிப்படைகின்றன என்று சமுக வறுமை தொடர்பாக 5 வருடங்கள் நடாத்தப்பட்டு சமீபத்தில் முடிவுகள் வெளியிடப்பட்ட ஆய்வொன்று தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்காவில் விஞ்ஞானத்தின் முன்னேற்றங்கள் குறித்து செண்ட் லூயிஸ்சில் நடைபெற்ற கற்றோர் உயர் குழாமொன்றின் அமர்விலேயே போதிய பராமரிப்பு இன்றி வளரும் குழந்தைகள் அதே வயதில் உள்ள மற்றைய குழந்தைகளை விட வளர்ச்சி குன்றியவர்களாகவும் புத்தி சாதுாரியம் பாதிப்புற்றவர்களாகவும் நடத்தையியல் உளவியல் சிக்கல்கள் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர் என்ற தகவல் வெளியிடப்பட்டது. ரோமானியாவில் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களில் வளர்க்கப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பொழுது முன்னைய நிலைக்கும் பின்னைய நிலைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்த தகவல்கள் வெளியாகின. பராமரிப்பு பெற்றோரிடம் வருவதற்கு முன்னர் காப்பகங்களில் இருந்த பொழுது மற்றைய குழந்தைகளை விடப் பத்து வீதம் வளர்ச்சிக்குன்றிக் காணப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு பெற்றோரிடம் வந்ததும் அதிசயிக்கத்தக்க முறையில் வளர்ச்சியுற்றமை அவதானிக்கப்பட்டது. பராமரிப்பு பெற்றோரிடம் வருவதற்கு முதலும் அக்குழந்தைகளுக்குச் சத்து உணவு கொடுக்கப்பட்டதெனவும் ஆயினும் பராமரிப்பு பெற்றோரிடம் வந்ததின் பின்னர் அவர்கள் வளர்ச்சி பெற்றமைக்கு உணவை விட அன்பாதரவுக் காரணிகளே முக்கியத்துவம் பெறுகின்றன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்திக் கூர்மையைப் பொறுத்தவரையிலும் பராமரிப்புப் பெற்றோரிடம் வந்ததின் பின்னர் 42 முதல் 54 மாதங்களில் பிள்ளைகளிடை அபரிதமான வளர்ச்சி ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பின்னணயில் மேரிலாண்ட் பல்கலைகழகப் பேராசிரியர் நாதன் பொக்ஸ் வாழும் சூழ்நிலையின் தன்மைகள் மாறும் பொழுது பிள்ளைகளின் உணர்ச்சிகளும் அறியும் ஆற்றலும் மாறுபடுகின்றன எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

நிறுவனப்பட்ட காப்பகங்களில் பிள்ளைகளின் உளவியல் பிரச்சினைகள் சாதாரண பிள்ளைகளை விட மூன்றரை மடங்கு அதிகம் எனக் கூறும் ஆய்வாளர்கள் எல்லா உளவியல் பிரச்சினைகளும் பராமரிப்பு பெற்றோரிடம் வளர்கையில் தீர்க்கப்பட்டு விடுமெனக் கூறமுடியாது ஆயினும் காப்பகங்களை விடப் பராமரிப்புப் பெற்றோரிடம் வளரும் குழந்தைகள் குறைவான கவலையுணர்வுகளையும் குறைந்த மனஅழுத்தத்தையும் குறைவான நடத்தையியல் பிரச்சினைகளையும் உள்ளவர்களாக வளர்கின்றனர் என்று மட்டுமே கருதலாம் என்கின்றனர்.

அத்துடன் காப்பகங்களில் பெண் பிள்ளைகளாயின் உணர்ச்சி சம்பந்தமான சிக்கல்களும் ஆண் பிள்ளைகளாயின் நடத்தைச்சிக்கல்களும் ஏற்படுவதையும் ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர்.

இரு நிலைகளிலும் வாழும் குழந்தைகளின் மூளையின் செயற்பாடுகளை ஹார்வார்ட் பல்கலைகழக ஆய்வாளர் வைத்தியர் சார்ள்ஸ் நெல்சன் EEG ( Electroencephaolograms) ஒப்பீடு செய்து பார்த்த பொழுது காப்பகங்களில் இருந்த சிறுவர்களின் மூளைச்செயற்பாடு குறைவாக இருப்பது உணரப்பட்டது. ஆயினும் இவர்கள் பராமரிப்பு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரும் பெரிய அளவில் முன்னேற்றங்கள் எதுவும் அவதானிக்கப்படவில்லை. மேலும் ERP (Ever Related Potential) என்னும் பரிசோதனை முறை மூலம் சிறுவர்களின் முகத்தில் ஏற்படும் மகிழ்ச்சி துக்கம் கோபம் அச்சம் போன்ற உணர்ச்சிகளை அவதானித்த பொழுது நிறுவனப்பட்ட காப்பகங்களில் வாழும் சிறுவர்களின் முகங்களில் பராமரிப்புப் பெற்றோரிடம் வாழும் சிறுவர்களின் முகங்களில் ஏற்படும் உணர்ச்சிகளை விடக் குறைவான வெளிப்பாடுகளே அவதானிக்கப்பட்டன.

## உலக உதைபந்தாட்டப்போட்டிக்கு இந்தியா ஒரே ஒரு தடவை தெரிவானது

இந்தியா உலக கிண்ண கால்பந்து போட்டியில் கலந்து கொள்வதற்கென 1950ல் முதற்தடவையாகத் தெரிவானது. இந்தப்போட்டி 2வது உலகப்போர் காரணமாக 1942 1946ல் நடைபெற வேண்டிய போட்டிகள் நடைபெறாமல் எட்டு வருட இடைவெளிக்குப் பின் 1950ல் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்திய விளையாட்டு வீரர்கள் வெறுங்காலுடன் விளையாட விரும்பினர். உலக உதைபந்தாட்டச் சங்கம் அதற்கு அனுமதிக்காததினால் இந்திய விளையாட்டுக் குழுவினர் விளையாடாமலே திரும்பிச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# முன்னுரை

வள்ளுவர் காதல் என்னும் அக உணர்வு மனித வாழ்வில் வகிக்கும் தன்மைகளை எடுத்து இயம்பிய 250 குறள்கள் 25 அதிகாரங்களாக காமத்துப்பால் என்னும் பகுப்பில் வகைப்படுத்தப்பட்டு உள்ளது. காமத்துப்பாலில் 39 இடங்களில் காமம் என்ற சொல் நேரடியாகக் குறள்களில் எடுத்தாளப்படுகிறது.

காமம் என்ற சொல் வள்ளுவர் காலத்தில் விருப்பு என்னும் பொருளையே கொண்டிருந்தது. மனவிருப்புக்கு உரியதாகி இன்பம் அளித்தல் என்ற பொருளிலேயே காமம் என்ற சொல்லை அன்று கையாண்டார்கள். கற்றாரைக் காமுறுதல் என்ற சொற்றொடர் அறிவுள்ளவர்களை விரும்புதல் என்றே பொருள்தருகிறது. ஆனால் இன்றோ காமம் என்பது பாலியல் தொடர்பான விடயங்களைக் குறிக்கும் சொல்லாக விளங்குகிறது. இதனை உணர்ந்த இன்றைய வள்ளுவ ஆய்வாளர்கள் காமத்துப்பால் என்பதை பாலியல் இன்பத்தை விளக்கும் தன்மையானதாகக் கருதி இன்பத்துப்பால் என அழைக்கின்றனர். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் விருப்புக்குரியது என்பதே சாலப்பொருந்தும் என்னும் உறுதியில் விருப்புக்குரியது காமத்துப்பால் என காமத்துப்பாலுக்கு தலைப்பிட்டு உள்ளேன்.

வள்ளுவரும் மூன்றே மூன்று முறைமட்டும் தான் காமத்துப்பாலில் இன்பம் என்ற சொல்லைக் கையாள்கிறார் என எங்கள் தாயகத்தின் திருக்குறள் சிந்தனையாளர் இ. சிறிஸ்கந்தராசா தனது திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ண ஜாலங்கள் என்னும் நூலில் தெரிவித்துள்ளார். இது வள்ளுவர் காமத்துப்பாலை இன்பம் வழங்குதல் என்ற நோக்கில் இயற்றவில்லை மாறாக மனித விருப்பு பாலியல் விருப்பாக மாறுகையில் மனிதன் அனுபவிக்கும் தன்மைகளை எடுத்தாராய்ந்து அதன் வழி காமம் என்னும் மனித விருப்பை நெறிப்படுத்த வழிப்படுத்த காமத்துப்பாலைத் தந்தார் என்கிற கருத்துக்கு அணி சேர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புக்குரியது காமத்துப்பால் எனத் தலைப்பிடுவது மானிடத்தின் இயல்புதன்மையான பாலியலைத் தவறானது அதனைப் பற்றி எழுதுவது பேசுவதே தவறு எனக் கருதும் பலரின் மூடத்தனமான போக்குக்கும் முற்றுப்புள்ளிவைப்பதாக அமைவது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. கூடலுக்கான விருப்பு என்பது இயற்கை தன்மையானதாக அமைவதை நாம் வண்டினங்கள் முதல் பறவைகள் மிருகங்களில் நிறையவே காண்கின்றோம். இதனாலேயே பெண்ணை மலராகவும் ஆணை வண்டாகவும் உவமிக்கும் இலக்கியப் பழக்கம் வழக்கமாகியது. எனவே காமத்தை இயற்கையின் உந்துதல்களில் ஒன்றாகக் கொண்டு அதற்கு மானிட அறிவின் அனுபவத்தின் வழி ஒழுங்குபடுத்தல்களை மேற்கொண்டு தனிமனிதனுக்கும் சமுதாய மனிதனுக்கும் ஏற்றவகையில் அதனை மாற்றும் பணியை இலக்கியங்கள் செய்தன எனலாம்.



அத்துடன் காமம் என்ற சொல்லையே கேவலமானதாகக் கருதும் போக்கு பெண்ணின் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாற்றுடன் தொடர்புடையதாக வளர்ந்து வந்துள்ளமையை நாம் கவனத்தில் கொள்ளல் அவசியம். அந்த வகையில் காமம் என்பது உள்ள விருப்பு - அந்த உள்ள விருப்பை மற்றைய விருப்புக்களை நாம் எவ்வாறு ஒழுங்குபடுத்தி நமக்கும் நாம் வாழும் சமுதாயத்திற்கும் ஏற்ற வகையில் வெளிப்படுத்துகின்றோமோ செயற்படுத்துகின்றோமோ அந்த வகையில் பயன்படுத்தச் செயற்படுத்த நமக்குப் பயிற்சி தரும் குறள்களாகவே காமத்துப்பாலை நான் கருதுகின்றேன்.

காமத்துப்பாலை வள்ளுவர் தந்துள்ள முறைக்கும் மற்றயைவர்கள் அறம் பொருள் இன்பம் என்ற வகையில் காமத்தையும் தத்தம் சமயக்கருத்தாக மாற்ற முயலும் வகைக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. வள்ளுவர் மனித உணர்வான காமத்தை அவனில் நின்று புறம் தள்ளவில்லை. அதனை மனிதனின் இயல்பான உணர்வாக ஏற்று அதே வேளையில் காம உணர்வினை காதல் என்னும் மனிதப் பகுத்தறிவின் பெறுதியுடன் இணைத்து நெறிப்படுத்துகிறார்.

வள்ளுவர் காலத்தில் எழுச்சி பெற்றிருந்த சமணமதத்தில் நிலம் கருவறையாகவும் விதை கருமுட்டையாகவும் நீர் விந்தாகவும் கொண்ட பிறப்பு முறையினை செடிகொடி மரங்கள் கூட கொண்டிருந்தன என்று கருதப்பட்டன. அந்த வகையில் இயற்கையும் தனது உற்பத்திக்கான ஒரு கலவிச் செல்நெறியினைக் கொண்டதாக அமைகிறது என்று நம்பப்பட்டது.

ஊர்வன பறப்பன நடப்பன எல்லாமே புணர்ச்சி வேட்கை மூலம் தம்மின உற்பத்தி முறைமையைக் கொண்டன என்ற அறிவு அன்றே நம் முன்னோர்களால் தெளிவாக உணரப்பட்டு இருந்தது. உடற்சேர்க்கை இன்பம் என்பதை அடைதல் என்னும் உணர்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டப்பட்டனவாக மிருகங்களும் பறவைகளும் தங்கள் இனப்பெருக்கத்தைச் செயற்படுத்துகின்றன. ஆனாலும் அவைகளுக்கு இடையில் கூட அவற்றின் பரிணாமவளர்ச்சித் தன்மைக்கு ஏற்ப அவை தங்களிடை உடற்சேர்க்கையில் ஒரு ஒழுங்கைக் கடைப்பிடிப்பதையும் இன்னும் தம் துணையுடன் கூடிவாழ முயல்வதையும் தம் குட்டி குஞ்சுகளுடன் குடும்பங்களைப் பேண கூட்டமாக இனமாக வாழ முற்படுவதையும் காண்கின்றோம்.



மனிதனை இயற்கைப் பரிணாமத்தின் உயர் பெறுதி என்று எடுத்தாலும் கூட மனிதன் பரிணாமத்தின் மூலம் வளர்த்துக்கொண்ட தன்னுடைய பகுத்தறிவின் மூலம் மிருகங்கள் பறவைகளிலிருந்து வேறுபடுகிறான். தன்னுடைய விருப்புகளுக்கு இச்சைகளுக்கு மட்டும் இடம் கொடுக்கும் உயிராக அமையாது அன்பு என்னும் உன்னதமான மனித உணர்வின் உறைவிடமாகிறான்.

தன்னைப் பிறர்க்காய் இழப்பதில் மகிழும் உயர் குணமாய் அன்பு மனிதனில் வெளிப்படுகிறது. அவளுக்காக நான் அவனுக்காக நான் என்னும் அன்பு உணர்வு இருவேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்ட ஆணும் பெண்ணும் தங்கள் விருப்புக்களை ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்கும் மனவிருப்பைத் தோற்றுவிக்கும் பொழுது அது காதலாகிறது. அந்தக் காதல் ஆண் பெண் என்ற ஈருடல் கொண்ட இருவரின் உள்ளங்களின் ஒன்றிப்பில் ஒரு உயிர் ஈருடல் கொண்ட காதலர்களாக அவர்களை மாற்றிவிடுகிறது.

விட்டுக் கொடுப்பில் தன் விருப்புக்களை இழப்பதில் பிறப்பது காதல் என்றால் காதல் ஏற்படுபவர்கள் உடல் பிணைப்பில் அல்லவா நிறைவு பெறுகின்றனர். எனவே இழப்பு அல்ல சேர்ப்பு தானே காதலின் முடிவாகிறது என்று நீங்கள் கேட்கலாம்.

உடல் உரசலில் காணும் இன்பம் மிருகத்தன்மையானது உள்ளப் பிணைப்பில் காணும் இன்பமே மனிதத்தன்மையானர்து. ஆனால் உள்ளப் பிணைப்பு என்பது ஒரு நிமிடத்தில் முடியும் கதையல்ல. வேண்டுமானல் உடல் பிணைப்பு நிமிடங்களில் தளரும். ஆனால் உள்ளத்தில் ஏற்பட்ட பிணைப்பு உடல் பிணைப்பு ஏற்படாத நிலையிலும் கூட தொடர்ந்து கொண்டே இருக்கும். இதனைத் தான் கண்ணதாசனின் மறக்க முயன்றேன் முடியவில்லை என்ற காதலர் மொழி இன்றும் உறுதிசெய்கிறது.

எனவே உடல் அணைப்பு காதல் அல்ல. உள்ள இணைப்பே காதல். உள்ள இணைப்பு அன்புக்காய் சுயத்தை ஆசைகளை விருப்புக்களை இழப்பதை மகிழ்ச்சியாக மாற்றும். இந்த இழப்பு தரும் சுகம்தான் காதல். அந்த இழப்புதான் உடல்களின் அணைப்புக்குத் தளமமைக்கின்றன. ஆவிக்கலப்பின் அமுதசுகந்தனில் மூடியிருந்த விழிநான்கு என்பது குயில் பாட்டில் பாரதி கண்ட காதல் தரிசனம்.

அந்த உள்ள ஒன்றிப்பபு என்னும் தளம்தான் வாழ்வில் இருவேறு குடும்பங்களில் பிறந்து வளர்ந்து பல்வேறு வேறுபாடுகளைத் தம்மிடையே கொண்டுள்ள ஆணையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணையும் வாழ்வின் சவால்களுக்கிடை மரணம் வரை விட்டுப்பிரியாத தொகுதியாக பயணிக்கும் சக்தியை அளிக்கிறது. ஆகவே இரு வேறு உள்ளங்கள் தங்கள் சுயத்தை ஒருவருக்காக மற்றவர் விட்டுக் கொடுத்துக் காணும் சுகம் தான் காதல் இன்பம் எனலாம்.

இந்நேரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் தான் காதல் ஏற்படுமா? என்னும் இன்றைய உலகின் கேள்விக்கும் பதில் காண வேண்டிய கடமை உண்டு. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் தோன்றும் உள்ள ஒன்றிப்பைத் தான் பொதுவாகக் காதல் என்று வழங்கும் வழமை உண்டு. மற்றைய நிலைகளிலும் உள்ள ஒன்றிப்பு ஏற்படலாம் ஆனால் அவற்றுக்கு அவற்றின் தன்மைகளை விளக்கும் பெயர்கள் வழக்கில் உண்டு.

ஆணும் ஆணும் பெண்ணும் பெண்ணும் ஒருவர்க்காய் மற்றவர் தங்கள் விருப்புக்களை விட்டுக் கொடுக்கும் மனவிருப்புக்கு - காதல் உணர்வுக்கு - உள்ளாகும் பொழுது அந்த அன்பு நட்பாகிறது. அதிலும் ஆணும் பெண்ணும் கூட பாலியல் உணர்வுக்கு அடிமையாகாமல் ஒருவருக்காக மற்றவர் விட்டுக்கொடுக்கும் அன்பு உணர்வுக்கு - காதலுக்கு உள்ளாகி அதில் உறுதியும் பெருமகிழ்வும் கொள்ளும் பொழுது அந்தக் காதல் உணர்வு மனித நட்புக்கே இலக்கணமான உன்னத நட்பாகிறது.





அவ்வாறே கணவன் மனைவி என்கிற நிலையில் ஒருவருக்காக ஒருவர் விட்டுக் கொடுக்கும் பொழுது அது காதல் என்ற உணர்வின் ஊடாக வளர்ந்து வந்த தாம்பத்திய நெருக்கமாகிறது. அந்த நெருக்கதிற்கு ஊடாக உள்ள ஒன்றிப்பும் உடல் இணைவும் சேர்ந்த இனப்பெருக்க முறைமையாக மனித பாலியல் தூண்டல் அனுபவிக்கப்படும் பொழுது அது அர்த்தமுள்ள இல்லறமாகிறது.

அந்த இல்லறதத்தின் விளைவாக அமையும் பிள்ளைகள் மேல்லான அன்பு என்பது கணவன் மனைவி மீதும் மனைவி கணவன் மீதும் கொண்ட உள்ள அன்பின் வெளிப்பாடாகிறது - பாசம் - என்னும் புதிய வடிவினை அன்பு பெறுகிறது. குழந்தைகளும் அந்த தாய் தந்தையர் இடையிலான பாச உறவைத் தாங்கள் முன்மாதிரிகையாகக் கொண்டு பெற்றோர் மேலான தங்கள் அன்பை பாசஉறவாக வளர்த்துக் கொள்கின்றனர்.

இவ்வாறு பாசமும் அன்பும் கடமையும் உரிமையும் கொண்டது வாழ்வு என்பதைக் குடும்பத்தில் தெரிந்து கொண்ட மனிதன் அதே பாச உணர்வை தான் வாழும் மண்ணின் மேலும் வளர்க்கையில் அது தேசபக்தியாகிறது. தன் மொழியின் மேல் பாசத்தை வளர்க்கையில் அது மொழிப்பற்றாகிறது. தன் மொழி பேசும் தன் சுற்றத்துடன் நிலவழி மொழிவழி கொள்ளும் அன்பு - உறவு - இனப்பற்றாகிறது.

அதன் வழி தன் இனத்தினை தன் நாட்டினை பாதுகாக்கும் வளப்படுத்தும் நெறிப்படுத்தும் தன்னலமற்ற தலைவன் மேல் கொள்ளும் அன்பு இனமான உணர்வாகி தேசத்தலைவனை தன் உயிராகக் கருதும் மாண்பாகிறது. இதன்வழி தன் தலைவனுக்கு அவனின் நாட்டுக்கு அவனின் மக்களுக்கு ஒன்று என்றால் அன்பு கொதித்தெழும் அன்பாகும் பொழுது அது வீரமாகிறது.

இவ்வாறாகத் தான் தமிழர் காதலையும் வீரத்தையும் தங்கள் வாழ்வில் ஒன்றுடன் ஒன்று இணைந்த விழுமியங்களாகக் கொண்டனர். காதல் இல்லையேல் வீரம் இருக்காது. வீரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இல்லையேல் காதல் இருக்காது என்பதை நன்கு உணர்ந்து காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கொண்டு புகழ் வாழ்வு வாழ்ந்த இனம் தான் தமிழினம்.

ஆனால் பௌத்த சமண சமயங்கள் தமிழர்களிடை பரவிய வேகம் அவை பேசிய நிலையாமை கருத்துக்கள் தமிழரின் காதலை வீரத்தை அவர்களே கைவிடும் அவலத்தை தோற்றுவித்து தமிழர் வாழ்வின் உயர்வை தமிழர் தாயகத்தின் இறைமையை இழக்க வைத்தது. இந்தக் காலகட்டத்தில் தான் அறம் என இவை இவை தான் செய்யப்படல் வேண்டும் என்று பட்டியல்களினுடாக கட்டளையும் கட்டுப்பாடும் உடையது வாழ்வு என்று அன்பும் அதன் வழியிலான தூய உள்ளத்தெழுச்சிகளான காதலும் வீரமும் கொண்டது சுதந்திர வாழ்வு என்ற உண்மை மறுக்கப்பட்டது.

அன்பின் சுதந்திரம் கட்டுப்பாடுகளின் ஊடாக நெறிப்படுத்தப்பட்ட பொழுது ஒழுக்கத்தை நேரிலும் மனித மனதின் விகாரங்களை மறைமுகமாகவும் கைக்கொள்ளும் சமுதாயத்தன்மை மேலோங்கியது. இதனால் சமணமும் பௌத்தமும் மேலாண்மை செலுத்திய அக்காலகட்டத்தில் இந்திய மண்ணில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் தங்களின் தாய் தந்தையர் யார் என்று தெரியாத நிலையில் வாழ்ந்தனர் என்பது ராகுல சங்குல தேரோ போன்ற வங்கத்து ஆய்வாளர்களின் கருத்து. இந்த கருத்துக்கு அரண் சேர்ப்பது போல் அக்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் பலரின் தாய் தந்தையர் குறித்த சரியான விபரங்கள் இல்லாதிருப்பதும் இவர்கள் எல்லாம் காட்டில் கிடந்து எடுக்கப்பட்டவர்கள் என்பது போன்ற இவர்களின் பிறப்புக்குறித்த பல மரபுக்கதைகளும் நம்பிக்கைகளும் அமைகின்றன.

இவ்வாறு தமிழர்களின் வீடும் நாடும் மனித வாழ்வின் இயற்கை நிலைகளை மறுக்கின்ற பல தத்துவங்களால் தடுமாறிப்போயிருந்த காலகட்டத்தில் தோன்றிய புனிதவதி என்னும் இயற்பெயர் உடைய காரைக்கால் அம்மையார் என்ற தமிழ்ப் பெண்ணின் சிந்தனை வளத்தாலும் செயலாக்கல் திறத்தாலும் மாற்றமொன்றுக்கான சிந்தனைப் புரட்சி ஒன்றுக்கான தளத்தைத் தமிழ் மண் பெற்றது. இந்த வரலாற்றை மாற்றுகின்ற வரலாற்று முயற்சியின் தத்துவார்த்த நூலாகத் தொல்காப்பியம் பிறக்க இக்காலக் கருத்துகளுக்கு காப்பியச் சுவை அளிக்கும் பொறுப்பை இளங்கோ சிலப்பதிகாரத்தின் மூலம் நிறைவேற்ற இந்தப் புதிய சிந்தனை அலையை மக்கள் மயப்படுத்தும் பணியினை திருக்குறள் செய்தது.


காரைக்கால் அம்மையார்


திருவள்ளுவர்


இளங்கோவின் கண்ணகியின் சிலை

இதனால் வள்ளுவர் வரலாற்றை மாற்றுகின்ற மனிதனை அவனது உள்ளத்தில் அவனது இல்லத்தில் அவனது நாட்டில்அவனது நாளாந்த வாழ்வில் இருந்து தோற்றுவிக்க முனைந்தார். இவை இவை தான் செய்யப்படல் வேண்டுமென்று தொகுத்து வகுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவது தான் அறநூல்கள் என்ற போதிக்கும் பாங்கிலான வழிகாட்டல் நிலையை மாற்றி மனித வாழ்வுக்கு உயர்வை பெருமையை அளிக்கத்தக்கவற்றை சிந்திக்க வைப்பதன் மூலம் மனிதன் தானாகவே ஒழுக்கத்தை கைக்கொள்ளப் பழக்கும் தந்திரோபாயத்தை திருக்குறளில் கையாள்கின்றார்.

இவ்வாறாக வள்ளுவர் போதனை மூலமல்ல சிந்திக்க வைப்பதன் மூலமே மனிதாயத்தை மக்கள் வாழ்வாக்க இயலுமென்று புதிய உத்திகளை கொண்டு அதைச் செய்தாலும் முந்து நூல் கண்டு முறைப்படி எண்ணி வினையின் நீங்கிய முனைவன் செய்வது முதல் நூல் என்னும் தொல்காப்பிய வரைவினுக்கு ஏற்ப காமத்துப்பாலை தொல்காப்பிய வழி நின்று களவியல் கற்பியல் என்னும் இருபிரிவுகளாக வகுத்துக் குறள் தந்துள்ளார். 25 அதிகாரங்களில் 250 குறள்கள் மூலம் மக்கள் அகவாழ்வினைத் தெளிவாகப் தெரிந்திட புரிந்திட வழிசமைத்துள்ளார்.


மக்கள் வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்து தன்மான இனமான வாழ்வுக்குச் சுயத்தை நிர்ணயிக்கும் மறத்தை வீரத்தை உடைய சமுதாயமாக மக்களை எழவைக்கும் தன்மை அகவாழ்வுக்குத் தான் உண்டு. இதனால் அகவாழ்வு குறித்த தெளிவான அறிவு தோன்றினாலே புறவாழ்வின் சிறப்பு சரித்திரப் பெருமையுடையதாக அமையும் என்பது நம் முன்னோர் அனுபவமாக அமைந்தது. அறவழி நின்று பொருள் வழி கண்டு மனிதன் அடைய முயல்வதே அவனின் இன்பவாழ்வு தான். இந்த மனித சுயநலத்திற்கு உரிய விளக்கம் கொடுத்து அதனை இலட்சியங்களுடன் இணைக்கும் பொழுது தான் புகழுடை வாழ்வாக மனித வாழ்வு மாறுகின்றது. இதனால் தான் தோன்றிப் புகழோடு தோன்றுக எனக் கூறி மண்மூடும் மானிட வாழ்வாக வாழ்வை மாற்றாது மண்போற்றும் வாழ்வாக தன்வாழ்வை மாற்ற ஒவ்வொரு மனிதனும் முயன்றிடல் வேண்டுமென்கிறான் வள்ளுவர். இந்தநோக்கின் விளக்கமாகவே வள்ளுவர் வாழ்விற்குத் தேவையான அனைத்தையும் எடுத்து விளக்குகின்றார்.

வள்ளுவரின் இன்பத்துப் பாலில் தகையணங்குறுத்தல் - குறிப்பறிதல் - புணர்ச்சி மகிழ்தல் - நலம் புனைந்துரைத்தல் - காதற் சிறப்புரைத்தல் - நாணுத் துறவுரைத்தல் - அலர் அறிவுறுத்தல் - என்னும் முதல் ஏழு அதிகாரங்களும் களவியல் பேசுகின்றது. இதன் மூலம் காதல் என்னும் மேலான மனித உணர்வையும் அதன் தன்மைகளையும் விளக்கிய வள்ளுவர் அதன் பின்னர் கொண்ட காதலில் உறுதியாக நின்று காலத்தை வென்ற வாழ்வினை இயற்றிட கற்பியல் விளக்குகின்றார். கற்பியலைக் கூட பிரிவாற்றாமை - படர்மெலிந்திரங்கல் - கண்விதுப்பழிதல் - பசப்புறுபருவரல் - தனிப்படர் மிகுதி - நினைத்தவர் புலம்பல் - கனவுநிலை உரைத்தல் - பொழுது கண்டு இரங்கல் - உறுப்பு நலன் அழிதல் - நெஞ்சோடு கிளத்தல் - நிறைழிதல் - அவர் வயின் விதும்பல் - குறிப்பறிவுறுத்தல் - புணர்ச்சி விதும்பல் - நெஞ்சோடு புலத்தல் - புலவி - புலவி நுணுக்கம் - ஊடலுவகை என மனித மனம் அனுபவிக்கும் உணர்ச்சிகள் ஊடாகவே வெளிப்படுத்தி வாழ்வின் தெரிவு உரிமையும் வாழ்வின் தூய தன்மையும் வாழ்வுக்கு வெளியில் இருந்து திணிக்கப்படுவதில்லை வாழ்வுடன் சேர்ந்து மனிதப் பண்பாக வளருகின்ற ஒன்று என்பதை தெளிவாக்குகின்றார்.

காமத்துப்பாலில் வள்ளுவர் தந்த அந்தத் தெளிவை இக்காலத்தமிழில் இக்காலத்திற்கு ஏற்ற வகையில் மீளவும் ஒருமுறை எடுத்து நோக்குவதே விருப்புக்குரியது காமத்துப்பால் என்னும் இக் கட்டுரையின் நோக்கு. இதன் நோக்கைப் புரிந்து கொண்டவர்களாக இதன் போக்குடன் இணைந்து நாளும் உங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கும் விருப்புக்குரியது காமத்துப்பால் என்ற உண்மையை வெளிப்படுத்தி தமிழ்மண்ணும் தமிழ்ப் பெண்ணும் சுதந்திரமாகத் திகழும் வாழ்வை நீங்கள் வாழ இக்கட்டுரை உதவுமானால் அதுவே இதை எழுதியதன் பயனாக அமையும்.

அன்பின்

பற்றிமாகரன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோல்சிங்கம் திருத்தலம் குறித்த வரலாற்றுக் குறிப்புகள்





வோல்சிங்கம் திருத்தலத்தின் தொன்மை 1061ம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகிறது. இயேசுவின் திருக்குடும்பம் நசரேத்து என்னும் சிற்றூரில் வாழ்ந்தது என்பது ஆன்மீக வரலாறு. முதலாவது மில்லேனியத்தில் அன்னை மரியாள் இங்கிலாந்தின் நோர்போக்கில் வாழ்ந்த ரிச்சல் டி பேர்வச்சஸ் (**Richeldis de Faverches**) என்னும் பக்தரிடம் நசரேத்தில் அமைந்திருந்த திருக்குடும்பத்தின் இல்லத்தின் வடிவில் ஒரு ஆலயம் அமைக்கும்படி கேட்டமைக்கு அமைய 1061ல் வோல்சிங்கம் நசரேத்தில்லம் எனப்படும் ஆலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் மரியன்னை வீட்டில் இருப்பது போல் நாற்காலியில் உட்கார்ந்து திருக்காட்சியளிக்கும் திருவுருவம் அமைக்கப்பட்டது. 1150ம் ஆண்டில் இங்கு அகஸ்டினியன் கனன்ஸ் (**Augustinian Canons**) என்னும் துறவிகளின் தவச்சாலை (**Priory** ) புனித இல்லம் (**Holy House**) என்னும் பெயரில் நிறுவப்பட்டது. ஆலயத்தின் தோற்றமும் புனித இல்லம் அமைக்கப்பட்டதும் இத்தலத்தில் மக்கள் இறை உணர்விலும் அமைதியான தியானவழிபாட்டிலும் ஈடுபடுவதற்கான அடித்தளத்தையிட்டன. 1340ல் சிலிப்பர் சிற்றாலயம் யாத்திரிகர்களுக்கு என விசேடமாக அமைக்கப்பட்டது. அத்துடன் இங்கு பிரான்சிஸ்கன் துறவிகளின் நிலையமும் நிறுவப்பட்டது. 1465ல் பைன்சன் எழுதிய பல்லட் (**Ballad published by Pynson**) என்னும் பாடல் தொகுதிதான் வோல்சிங்கம் குறித்த முதலாவது எழுத்துருவ ஆவணமாக உள்ளது.

1226முதல் இத்திருத்தலத்தின் மகிமையைக் கண்டுணர்ந்த இங்கிலாந்தின் அரசர்கள் திருயாத்திரை செய்யும் வழக்கம் ஏற்பட்டது. திருயாத்திரையைத் தொடக்கிய முதலாவது அரசன் 3வது ஹென்றி ஆவார். அதன் பின்னர் அரசர்கள் பலர் பலதடவைகள் இங்கு திருயாத்திரை செய்துள்ளனர். இதில் முதலாவது எட்வேர்ட் 11 முறை திருயாத்திரை செய்து அதிக தடவை இங்கு திருயாத்திரை செய்த புகழைப் பெற்றுள்ளார். 2வது எட்வேர்ட் 1315லும் 3வது எட்வேர்ட் 1361லும் ஸ்கொட்லாந்தின் அரசன் 1364லும் 2வது ரிச்சர்ட்டும் அரசி ஆனும் 1383லும் அரசி யோஆன் 1427லும் 4வது எட்வேர்ட் 1469லும் ஆறாவது ஹென்றி 1487லும் யாத்திரைகள் செய்தனர் எனக் கோயில் குறிப்புகள் தெரிவிக்கின்றன. கத்தோலிக்க மதம் இங்கிலாந்தில் தடைசெய்யப்படுவதற்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருயாத்திரையை மேற்கொண்ட கடைசி அரசனாக எட்டாவது ஹென்ரி விளங்குகிறார். அரசன் 2வது ரிச்சர்ட்டால் 1381ல் இங்கிலாந்து மரியன்னையின் சீதனப் பூமி என வெஸ்ட் மினிஸ்டர் அபியில் வைத்துப் பிரகடனப்படுத்தப்படும் அளவுக்கு அக்காலத்தில் மரியன்னை பக்தி இங்கிலாந்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1513ல் இவ்வாலயத்திற்கு யாத்திரை செய்த டச்சு அறிஞர் எரஸ்மஸ் (**Erasmus**) தனது குறிப்பில் இவ்வாலயத்தின் நாற்புறமும் புனிதர்களின் திருவுருவங்கள் வெள்ளியிலும் தங்கத்திலும் செய்யப்பட்டு நவரத்தின வைரக்கற்கள் பதிக்கப்பட்டு ஒளிர்ந்து கொண்டிருந்ததாகவும் ஆலயத்தின் மூலையில் இருளான இடத்தில் சிறிய உருவத்தில் மரியன்னையின் திருவுருவம் காணப்பட்டதாகவும் கூறியுள்ளமை அக்காலத்தில் இவ்வாலயம் அதன் தோற்ற நோக்கில் இருந்து மாறுபட்டு செல்வந்தர்களின் யாத்திரை தலமாக திகழ்ந்துள்ளதென்பதை வெளிப்படுத்துகிறது. 1534ல் எட்டாவது ஹென்றி ஆன் பொயிலனை கத்தோலிக்க மதத்தின் நடைமுறைகளுக்கு எதிராகத் திருமணம் புரிந்த பொழுது அவனை ஏற்றுக் கொண்ட ஆலயங்களில் வோல்சிங்கம் முதலாவது இடத்தைப் பிடித்தது. அத்துடன் அவனால் நிறுவப்பட்ட அவனைத் தலைவனாகக் கொண்ட ஆங்கிலேயத் திருச்சபையினையும் வோல்சிங்கம் ஆலயம் ஏற்றுக்கொண்டது. அதனை எதிர்த்த ஆலயத்தின் உதவிக் குரு நிக்கலஸ் மைல்ஹாமும் அடியார் ஜோர்ஜ் கியூஸ்பரோவும் (**Nicholas Mileham, and layman George Guisborough)** சிரச்சேதம் செய்யப்பட்டனர். தொடர்ந்து 1538ல் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க இயலாத நிலையில் ஆலயம் பூட்டப்பட்டு சரணாகதி ஒப்பந்தம் செய்யப்பட்டது. மரியன்னையின் திருஉருவம் இலண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மற்றைய திருவுருவங்களுடன் சேர்த்து எரியூட்டப்பட்டது. நசரேத்தில்லமும் மற்றைய ஆலயங்களும் எரிக்கப்பட்டன. சிலிப்பர் சிற்றாலயம் மாட்டுத் தொழுவமாக மாற்றப்பட்டது. அதன் பின் சோபை இழந்த வோல்சிங்கம் திருத்தலத்திற்கு 1578ல் முதலாவது எலிசபேத் வருகை புரிந்ததாகவும் 1781ல் ஜோண் வெஸ்லி இப்பதிக்கு வந்து மறையுரையாற்றியதாகவும் 1896ல் சார்லட் பொய்ட் சிலிப்பர் சிற்றாலயத்தை வாங்கி மீளவும் ஆலயத்தை தொடங்க முயற்சித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 1897ல் 13வது திருத்தந்தை லியோ அவர்கள்தான் மீளவும் லின் அரசனின் (**Lynn.**) காலத்தில் இவ்வாலயத்தை மீண்டெழ வைத்த திருத்தந்தையாகக் கருதப்படுகிறார். 1906ல் சார்லட் பொய்ட் காலமாகினார்.

1921ல் அருட்தந்தை அல்பிரட் ஹேப் வோல்சிங்கத்தின் குருமுதல்வராக நியமிக்கப்பட்டார். ஆயினும் 1922ல் ஆங்கிலிக்கன் ஆலயத்தில்தான் அன்னையின் திருவுருவம் மீளவும் அமைக்கப்பட்டது. 1923முதல் ஆங்கிலேயத் திருச்சபையின் பக்தர்கள் இங்கு திருத்தலயாத்திரையைத் தொடங்கினர். 1934ல் கத்தோலிக்க திருச்சபையின் கருதினால் போர்னே (**Cardinal Bourne**)தலைமையில் கத்தோலிக்கர்களுக்கான திருத்தலயாத்திரை சிலிப்பர் சிற்றாலயத்திற்கு மேற்கொள்ளப்பட்டு திருப்பலியும் நிறைவேற்றப்பட்டு சிலிப்பர் சிற்றாலயம் கத்தோலிக்க மதத்தினரின் தேசியத் திருத்தலமாக அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்வாறாக மீளவும் தொடங்கப்பெற்ற வோல்சிங்கம் கத்தோலிக்கத் திருயாத்திரையில் 1948 முதல் யூலை 16ம் நாள் அமைதிக்கும் தபத்திற்கும் செபத்திற்குமான தினமாக அறிவிக்கப்பட்டு அன்றைய தினம் திருச்சிலுவை பாதை வழிபாட்டுடன் கூடிய வழிபாடுகள் தொடங்கப்பெற்றன. 1950ல் தற்காலிக ஆலயமும் 1953ல் சிலிப்பர் ஆலயத்திற்கு முன்னுள்ள மரியன்னை விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஓவிய சாளரக் கண்ணாடியும் பொருத்தப்பட்டன. 1954ல் 10000 முதல் 20000 பக்தர்களுடனான திருயாத்திரை ஆவணி 15ல் மரியன்னை விண்ணேற்பு தினத்தன்று நடாத்தப்பட்டது.
1997ல் ஆலயம் மீளப்பெறப்பட்ட நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டது. 2001முதல் வோல்சிங்கம் அன்னையின் திருநாளாக செப்டெம்பர் 24ம் நாள் கொண்டாடப்படும் என வத்திக்கானின் புதிய திருநாள் நாட்காட்டி அறிவித்துள்ளது.

இனி இவ்வாலயத்தில் தமிழர்கள் யூலைமாதத்தில் திருயாத்திரை செய்யும் வழமை 1983 யூலை இனஅழிப்பினை அடுத்து அப்பொழுது இங்கு இருந்த அருட்தந்தை தி இ தேவராஜன் தலைமையில் தொடங்கப் பெற்றது. 1983 யூலை இனஅழிப்பு ஏற்படுத்திய துன்பியல் நிலையில் இருந்து மக்களை விடுவிக்க வேண்டுமெனவும் தாயகத்தினதும் மக்களினதும் பாதுகாப்பான அமைதி திரும்பவேண்டுமெனவும் தொடங்கப் பெற்ற தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தலயாத்திரை தமிழர்களின் சமுக ஒன்றிப்புக்கான ஆன்மீக தினமாக வளர்ச்சி பெற்றுள்ளது. சில்லாலை கதிரை மாதா கோயிலில் மரியன்னை ஆலயத்தில் இருக்கும் திருவுருவம் உள்ளது. சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் தான் டச்சுக்காலத்தில் புனித துறவி யோசவ்வாஸ் இந்தியாவில் இருந்த வந்து இறங்கி தங்கி நின்று இலங்கையில் கத்தோலிக்கம் தமிழ் சிங்கள பகுதிகளில் மீளவும் புத்துயிர் பெறுவதற்கான தனது ஆரம்பப்பணிகளைச் செய்தார். அந்த வகையில் கதிரைமாதா திருவுருவம் தமிழீழக் கத்தோலிக்க வரலாற்றிலும் மக்களுக்கு ஆற்றலை அளித்த ஒ்னறாக உள்ளது. மேலும் யூலை 2ம் திகதி மருதமடுத் திருத்தலத்தின் திருநாளாகவும் இருப்பதினால் யூலை மாதம் மரியன்னையின் பெயரால் திருயாத்திரை செய்யும் தமிழ்க்கத்தோலிக்க மரபினை புலத்திலும் தொடரும் செயலாக வோல்சிங்கம் திருத்தலயாத்திரை அமைகிறது. இம்முறை தற்பொழுது இலண்டன் கத்தோலிக்க மையத்தின் பொறுப்பாளராகவுள்ள அருட்தந்தை யூஜின் அடிகள் தலைமையில் வோல்சிங்கம் தமிழர் திருத்தல யாத்திரை யூலை 9ம் திகதி நடைபெறுகிறது. தமிழர் தாயகத்தினதும் தமிழீழ மக்களினதும் அமைதிக்கும் சமுக பொருளாதார ஆன்மீக எழுச்சிக்குமான தினமாக இத்திருத்தலயாத்திரை இடம்பெறுகிறது. இந்த உணர்வுகளையும் வோல்சிங்கம் திருத்தலத்தின் புனிதத்துவத்தையும் பேணியவர்களாக புலம்பெயர் தமிழீழ மக்கள் அங்கு வழிபாட்டையும் தங்கள் சமுக ஒன்றிப்பையும் நடாத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மதங்கடந்த மருதமடு





தமிழீழத் தாயகத்தின் மன்னார் மாவட்டத்தில் உள்ள மருதமடு திருத்தலத்தின் ஆலய ஆண்டுத் திருவிழா யூலை 2ம் திகதி இடம்பெற்றது. 1593 முதல் மதங்கடந்த மொழிகடந்த மானிடத்தின் ஒன்று கூடலாக பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடும் இவ்வாலயத்தின் திருவிழாவில் இம்முறை சிறிலங்கா படைகளினது கெடுபிடிகள் காரணமாக மிகக் குறைந்த அளவிலேயே மக்கள் கலந்து கொண்டனர் எனச் செய்திகள் தெரிவிகின்றன. 1999 நவம்பர் 20ம் திகதி சிறிலங்காப்படைகள் நடாத்திய தாக்குதலில் இவ்வாலயத்தின் வளாகத்தில் ஐக்கியநாடுகள் அகதிகள் ஆணையாளரின் கண்காணிப்பில் தங்கியிருந்த 38 தமிழர்கள் குழந்தைகள் பெண்கள் உட்பட உயிரிழந்த சோகவரலாறு பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 2001ல் மருதமடு மாதாவின் திருவுருவம் சமாதானம் வேண்டி பங்குனி மாதத்தில் அதன் 500 ஆண்டு கால வரலாற்றில் முதற்தடவையாகத் தென்னிலங்கை எங்கும் கொண்டு செல்லப்பட்டது. மேலும் கத்தோலிக்கத் தமிழர்களின் தொல்பதியாகிய இத்திருத்தலத்தை இலங்கையின் தேசிய திருயாத்திரைத் தலமாக பிரகடனப்படுத்தும்படி முன்னாள் அமைச்சர் ஜயலத் பெர்ணான்டோ திருத்தந்தைக்கு வத்திகானுக்கு கடிதம் எழுதியிருந்தார். இதனையும் கதிர்காமத்தைப் போல் சிங்களமயப்படுத்தும் நோக்கிலா அல்லது தமிழ்க் கத்தோலிக்கரின் திருத்தலம் ஒன்றுக்கு உயர்ச்சி அளிக்கப்படல் வேண்டும் என்ற நோக்கிலா எதில் இதனை அவர் எழுதினார் என்கிற சந்தேகம் தமிழர்க்கு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழர் தாயகத்தின் மறைமாவட்டங்கள் சிங்கள மறைமாவட்டங்களில் இருந்து பிரிக்கப்பட்டு தனியான பேராயரின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டுமென தமிழ் ஆயர்கள் வத்திக்கானிடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10வீத சிறுவர்கள் உளவியல் அழுத்தத்தை அனுபவிக்கின்றனர்

நடுத்தர வயதுச்சிறுவர்களில் 10 வீத சிறுவர்கள் உளவியல் அழுத்தத்துடன் வாழ்கின்றனர் என்பது வேதனையான உண்மையாக உள்ளது.



## முக்கிய காரணங்கள்

பெற்றோர் பிள்ளைகளுடன் வாதிடுவது அல்லது பெற்றோர் பிள்ளைகளைத் திட்டுவது சிறுவர்களின் மன அழுத்தத்திற்கான முதலாவது காரணியாக உள்ளது. நண்பர்களுடன் ஏற்படும் மனமுறிவுகள் - அதிக அளவுக்கு கிண்டல் கேலிக்கு உள்ளாவது - அதிக வீட்டு வேலைகள் அல்லது பள்ளிப்படிப்புகள் - பாடசாலைப் பரீட்சைகள் - விடுமுறை நாட்களில் அதிக அளவுக்கு பிறந்த நாள் விழாக்கள் கல்யாணங்கள் சமுக விழாக்கள் என்பவற்றில் ஈடுபடுவது என்பன சிறுவர்களின் மனதைப் பாதிக்கும் மற்றைய காரணிகளாக உள்ளன. .அதிக மகிழ்ச்சியுடன் எப்பொழுதும் சிறுவர்களை வைத்திருப்பதும் அவர்கள் வாழ்வின் துன்பங்கள் துயரங்கள் நோய்கள் போன்ற சவால்களை எதிர்கொள்ள முடியாது மன அழுத்தத்தை அளிக்கிறது என்பதும் ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. சிறுவயதில் எப்பொழுதும் சிறுவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்து பழக்கிவிட்டாலும் பின்னர் எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பொழுது ஏமாற்றமடைந்து மன அழுத்தத்தை அனுபவிக்கின்றனர். மன அழுத்தம் சிறுவர்களை ஒரேயடியாக ஒதுங்கி வாழும் போக்கை அல்லது எடுத்தவுடனே கொதித்து எழும் போக்கை வெளிப்படுத்த வைக்கிறது.

## சிறுவர்கள் தமது மனஅழுத்தத்தை அவர்களே நிர்வகிக்க பெற்றோர் பெரியோராகிய நாம் என்ன செய்ய வேண்டும்?

- அன்பும் அரவணைப்பும் காட்டி அவர்களின் தன் மதிப்பையும் தன் நம்பிக்கையையும் வளர்த்தல் மிகமிக அவசியம்
- குடும்பத்தில் என்ன நடக்கிறது எவை நிகழவுள்ளன என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குவது அவசியம். பிள்ளைகள் தங்களைச் சுற்றிவர என்ன நடக்கிற தென்பதில் ஆர்வம் உள்ளவர்கள்.
- பரீட்சைக்கு அவர்கள் ஆயத்தப்படுத்துவதற்கு விடுமுறைகளைக் கழிப்பதில் உதவுவதற்கு விடுமுறை முடிந்து மீளவும் பள்ளி செல்வதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டுமெனப் பெற்றோர்கள் அவர்களுடன் உரையாடி உதவுதல் வேண்டும்.
- பிள்ளைகளின் வழமைகள் மாறுபடுகையில் உடன் தலையீடு அவசியம். நடத்தைகள் போக்குகள் மாறுகையில் அடிக்கடி கோபம் குமுறல் வருகையில் உண்ணாது விட்டால் அல்லது அதிகஅளவில் உண்டால் தூங்காது விட்டால் அல்லது அதிக அளவில் தூங்கினால் உடனடியாகவே அன்புடன் உதவ முற்படுதல் முக்கியம்.
- பிள்ளைகளுடன் அவர்களது உணர்ச்சிகள் எவ்வாறு உள்ளன அவர்களது உணர்வுகள் எப்படியிருக்கிறது என அடிக்கடி கதைத்து கேட்டு அறிதல் வேண்டும். இந்நேரத்தில் நண்பனாய் தோழியாய் உரையாடல் அவசியம். இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய். எது களைப்பை வெறுப்பை கவலையை தருகிறது. எது மகிழ்ச்சியை விருப்பை தருகிறது. எவ்வளவு காலமாக இந்த களைப்பு வெறுப்பு கவலை உள்ளது. அதற்கான காரணம் அதிக அளவான படிப்பாக இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கூட குறைக்குமாறு கூறுவதுதான் சிறுவர்களுக்கு சிந்தையில் பெற்றோர் தங்களை மேலாக மதிக்கின்றார்கள் என்கிற பாசத்தை வளர்க்கும்.

- யதார்த்த உணர்வுடன் பிள்ளையை அணுகுங்கள். பிள்ளை செய்ய இயலாது அழுத்தமடையும் விடயங்களை அது நல்லதென நினைத்து அதனைச் செய்யும் படி கட்டாயப்படுத்தல் கூடவே கூடாது.
- பிரச்சினைகளுக்கு தீர்வுகளை நீங்களே கூறிக்கொண்டிராது பிள்ளையிடமே அதனை எவ்வாறு அவர் தீர்க்க விரும்புகிறார் என்று கேட்டு அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சாதகபாதகங்களை கதையுங்கள். இதன் வழி பிள்ளை பிரச்சினைகளுக்குத் தானாகவே தீர்வுகளைத் தேடும் பழக்கத்தை வழக்கமாக்கலாம்.
- கவலையுற்ற சோர்வுற்ற பிள்ளையின் திசையை மாற்றக் கூடிய உத்திகளை மேற்கொள்தல் இன்றியமையாததாக உள்ளது. அவருக்கு பிடித்தமான இடத்துக்கு அனுப்புவது பிடித்தமான பொழுது போக்கை அனுமதிப்பது வேறு அவருக்கு பிடித்தமான வேலைகள் கலைகள் என்பவற்றில் அவரை ஈடுபடுத்துவது போன்ற செயல்களினால் ஒருவரின் மனதின் திசையை மாற்ற முடியும்.
- பிள்ளை தனியாக வாழ்வதை எப்பொழுதும் உற்சாகப்படுத்துங்கள். நீங்கள் வழிகாட்ட வேண்டும். பிள்ளை வாழ வேண்டும் என்பதை மறந்து நீங்கள் பிள்ளையில் உங்களை உங்கள் விருப்பு வெறுப்புகளை எதிர்பார்ப்புகளை வாழ்விக்க முற்படாதீர்கள். அவற்றை கூறுங்கள் அதற்கு ஏற்ப பிள்ளை பாசத்துடன் ஏற்று நடப்பார் இல்லையேல் அது பிள்ளையின் சுதந்திரம் என அதனை பொறுத்துக் கொண்டு கதைத்துப் பேசி உங்கள் கருத்துக்கள் அவர் கருத்தில் தாக்கத்தை ஏற்படுத்தச் செய்யுங்கள்.

## சிறுவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்க சில சுருக்க வழிகள்

- அதைச் சாதிக்க வேண்டும் இதை அடைந்திட வேண்டுமென அதிக அழுத்தம் கொடுக்காதீர்கள்
- நீங்கள் நிதானமாக பதறாது கோபப்படாது அமைதியாக உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்களாயின் அதுவே பிள்ளை பிரச்சினைகளைத் தீர்த்தற்கான சிறந்த முன்னுதாரணமாகும்.
- பிள்ளைகளை அவர்கள் விரும்பியதைச் செய்ய சில மணிகளாவது அனுமதியுங்கள். தொலைக்காட்சி பார்த்தல் தொலைபேசியில் கதைத்தல் விளையாட்டுக்களை வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் விளையாடல் என்பவற்றுக்கு ஒவ்வொரு நாளும் சில மணிகளை அனுமதித்ததின் பின்னரே டியூசனுக்கு அனுப்புவதோ அல்லது பாட்டு வகுப்புகள் நடன வகுப்புகளுக்கு அனுப்புவதோ அல்லது தொடர்ந்து படிக்கத் தூண்டுவதோ முக்கியம்.
- வாழ்வில் இடைவெளி விட்டு செயற்படுங்கள். நீங்கள் வேலை என்றும் படிப்பு என்றும் வர்த்தகம் என்றும் ஓடிக்கொண்டு நேரம் இல்லாது போனால் பிள்ளை உங்களுடன் நெருங்கிப் பழகும் காலத்தை சந்தர்ப்பத்தை இழக்கிறது.
- குடும்பத்தில் மாற்றங்கள் சிக்கல்கள் வருகையில் குழந்தைகளுக்கு அவர்களுக்கு ஏற்ற விதத்தில் எடுத்து விளக்கும் பொறுமையைக் கடைபிடியுங்கள். வீட்டில் உணர்ச்சிகளால் குமுறாதீர்கள் கத்தாதீர்கள் அவை குழந்தைகளைப் பாதிக்கும்.
- குழந்தைகளின் கைகால்களை வருடிவிடுதல் அவர்களை அரவணைத்தல் கட்டி அணைத்துப் பேசுதல் என்பவற்றை சிறுவயது முதலே பழக்கமாக்கி அதனை துன்பதுயரத்தில் நோயில் ஆறுதல் சொல்வதற்கான வழியாக அவர்கள் அனுமதிக்கச் செய்தல் நல்லது. கை கால்களை முதுகை நெற்றியை தலையை வருடி விடுதல் பல வழிகளில் உதவுமென்பது பலரின் கருத்து.
- பிள்ளை அனுதினமும் போதிய உடற்பயிற்சி செய்வதை உறுதிப்படுத்துங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெண்களும் குழந்தைகளும்

*"எந்தக் கணம் ஓர் அடிமை தான் இனிமேல் அடிமையாக இருக்கப்போவதில்லை என்று மன உறுதி பூணுகிறானோ, அத்தருணத்திலேயே அவன் விலங்குகள் வீழ்ந்து விடுதலை அடைந்து, ஏனையோருக்கும் வழிகாட்டியாக மாறுகிறான். **அடிமையும் விடுதலையும் மனநிலைகளே**"* – மகாத்மா காந்தி


## பெண் குறித்த மனநிலை – குழந்தைகள் குறித்த மனநிலை

பெண் குறித்த கருத்துருவாக்கம். தாய் தங்கை தாரம் என்பதாகும். இவை அவளின் மனிதத்துவம் குறித்த நிலையில் ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள் சொல்லில் அடங்கா.

மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ – என்கிறது சிலப்பதிகாரம்

எறியென்று எதிர்நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி – அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ் பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை – என்கிறது நாலடியார்.

இரண்டுமே தமிழர்களிடை நிலவும் இருவேறு கருத்துக்களின் வெளிப்பாடுகள். பெண் குறித்த பலரின் கருத்துக்கள் பெண்ணில் மனவடுவை ஏற்படுத்துகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணியத்தின் முக்கியத்துவம்



மனித சமுதாயத்தின் வளர்ச்சிகளின் அடிப்படையில் பெண்ணியம் என்ற கோட்பாட்டின் வளர்ச்சி காலத்தின் பரிமாணம். ஆயினும் இந்தப் புதிய சிந்தனை ஏற்படுத்தும் விளைவுகள் பிரச்சினைக்கான தீர்வாகிறதா அல்லது ஆண் பெண் என்கிற பாலியல் தன்மையின் முனைவாக்கங்களை தோற்றுவிக்கிறதா? பெண்ணின் சமுகம் சார்ந்த நிலையின் சுதந்திரத்தன்மை மண்ணின் விடுதலையுடன் இணைந்த தொகுதியாக உள்ளது. இந்த வரலாற்று உணர்வுக்கும் பெண்ணியத்திற்கும் இடையில் உள்ள உறவு உணரப்படுகிறதா?

## குழந்தை வளர்ப்பின் நுணுக்கங்கள்



குழந்தை பிறந்தது முதல் மனிதத்துவத்தை கொண்டுள்ளது. ஆனால் 16 வயது வரை முடிவெடுப்பதில் முதிர்ச்சியில்லா நிலை கொண்ட மனிதனாக உள்ளது. இந்நிலையில் தாய் தந்தையரே குழந்தையின் உடல் உள்ள பாதுகாவலர்கள். இந்நிலையில் குழந்தை தாய் தந்தை இருவரினதும் அன்புறவின் வெளிப்பாடு என்ற வகையில் இருவருக்கும் உரிய பொதுப் பொறுப்புகளும் சிறப்புப் பொறுப்புகளும் உள்ளன.

தாய்போம் அறுசுவை போம் தந்தைபோம் கல்விபோம்
சேயோடு தான் பெற்ற செல்வம் போம் - ஆயவாழ்
வுற்றாருடன் போம். உடன் பிறப்பால் தோள் வலிபோம்
பொற்றாலியோடெவையும் போம்

- ஔவையார் தனிப்பாடல் திரட்டு முதலாம் பாகம் பக்கம் 125

அவ்வை சொன்னதன் பொருளை உணர்த்தினால் பெற்றோரை உற்றோரைப் போற்றும் பண்பு தோன்றும். ஆனால் பொற்றாலியோடெவையும் போம் என்பது இக்காலத்திற்கு ஏற்புடையதா என்று எடுத்து விளக்குதலும் அவசியம்.

## இளையவர்களின் உலகம்

இளையவர்களின் உலகம் என்பது அவர்களது ஆற்றல்கள் வெளிப்படுவதற்கான தளம். ஒரு மனிதனின் முழு ஆற்றலையும் அவன் வெளிப்படுத்தும் நிலை நிலவுதல் சுதந்திரம் எனப்படும். இந்நிலை பெற்றோரால் பேணப்படுகிறதா? மேலும் புதிய பண்பாட்டுக் கலாச்சார வாழ்வில் இளையவர்கள் குறித்து நாம் கொள்ளும் அச்சம் அவர்களின் சுதந்திரத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடையாகிறதா? கல்வியில் பெற்றோர் விருப்பு தெரிவுரிமை எந்த அளவுக்கு அவர்களின் ஆற்றல்களை வளர்க்க உதவும்? இவைகள் குறித்துச் சிந்தியுங்கள்.








2005 ல் ஐரோப்பியஒன்றியத்தின் இளைய விஞ்ஞானிகள் பரிசு பெற்றவர்கள். 2006ம் ஆண்டுப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 23 முதல் 28 வரை சுவிடனில் நடைபெற வுள்ளது. 15 வயது முதல் 28 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தங்கள் கண்டுபிடிப்பு க்களைக் காட்சிக்கு வைத்துக் கலந்து கொள்ளலாம். விபரங்களுக்கு பின்வரும் கணனி வலையைப் பார்க்கவும் : (http://www.eucontest.se/press/press-information)

## யார் காலத்திற்கு ஏற்ற மாணவன்?

1. தேசத்தைக்கட்டியெழுப்புவதற்கான திறன்கள். இதற்கு ஏற்புடைய முறை எது? தேடுதல் ஆழமாக ஆராயந்து அறிதல் - வாழ்நாள் முழுவதும் கற்கும் திறனை அடைதல்.
2. படைப்பாக்க சக்தியையும் புதிய சிந்தனைகள் படைப்புக்களையும் ஊக்குவித்தல்.
3. தொழில் நுட்பத்திறன்.
4. தொழில் தேடும் தன்மையை வளர்த்தல் -.
5. தார்மீகத் தலைமை – மனிதகுல மேப்பாட்டிற்காக தொலைநோக்காகச் சிந்தித்து உரியவற்றை செய்து முடிக்கும் மனஉறுதியும் மற்றவர்களையும் கூட உரியனவற்றையே செய்ய வைக்கும் அளவுக்கு தூண்டு சக்தியாக இருப்பதும் தார்மீகத் தலைமை.யின் பண்புகள்.

இந்த ஐந்து பண்புகளை கொண்ட மாணவனே இன்றைய காலத்திற்கு ஏற்ற மாணவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுக உள்வாங்கல் பண்பாட்டு மீட்டுணர்வின் ஊடாக பெறப்படல் வேண்டும்

பெண்களையும் இளையவர்களையும் உள்வாங்க தமிழர் சமுகம் என்ன வழிகளைக் கையாள்கிறது? கையாள வேண்டும்?

பெண் என்னும் மானிட சக்தியையும் ஆண் என்னும் மானிட சக்தியையும் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் மிக அவசியம். பெண் ஆண் செய்வனவற்றை எல்லாம் செய்ய வேண்டுமென்பதோ அல்லது ஆண் பெண் செய்வன எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்பதோ ஆண் பெண் சமத்துவமல்ல. ஆண் தேவை ஏற்படும் பொழுது பெண்ணாகவும் பெண் தேவை ஏற்படும் பொழுது ஆணாகவும் மாறுகின்ற நிலை இருவரிடத்திலும் நிறைய உண்டு.

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணிடை ஆணென் பிறப்பறிந்து ஈர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்றவாறே

என்னும் திருமந்திரத்தில் பெண்ணில் பெண் குணம் தான் சேர்ந்துள்ளது என்பது அறியாதவர்கள் கருத்து. பெண்ணில் ஆண்தன்மையும் உண்டு. உதாரணமாக பேணுதல் என்னும் செயற்பாட்டில் அன்பை வெளிப்படுத்துகையில் செயற்பாட்டு நிலையில் ஆண் பெண்ணாகும் நிலை உண்டு. அவ்வாறே காத்தல் என்னும் செயற்பாட்டில் வீரத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும் பொழுது செயற்பாட்டு நிலையில் பெண் ஆணாவதும் உண்டு. எனவே செயற்பாட்டு நிலையில் ஆண் பெண் என்கிற பாலியல் பேதங்கள் காட்டுதல் அறியாமையின் வெளிப்பாடு என இன்று Gender Equality என ஏதோ பாலியல் சமத்துவத்தை மேலைத்தேயமே கண்டு பிடித்தது போல் பேசுகின்றவர்களுக்கு திருமுலர் அன்றே தன் பாட்டால் பதில் சொல்வதைக் காண்கின்றோம்.



சிவம் இல்லையேல் சக்தியில்லை சக்தியில்லையேல் சிவமில்லை

தமிழர் ஆன்மீகத்தில் ஆண் பெண் சமத்துவத்தைப் பேணுதல் என்பது தெய்வநிலையில் கூட பேணப்பட்டுள்ளது. சிவனின் அர்த்த நாரீஸ்வரர் திருக்கோலம் ஆணாகிப் பெண்ணாகி நின்றான் அவன் என்கிற மகத்தான தத்துவத்தை விளக்குகிறது. அதே நேரத்தில் சிவமும் சக்தியும் இணைந்த திருக்கோலத்தில் இறைவனைத் தொழுதல் என்பது வாழ்வில் ஆண் பெண் என்கிற பாலியல் பேதம் தலைதூக்காது வாழ்வதற்கான மனவளர்ச்சி ஏற்படத் தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே இறைவனே வாழ்வின் எல்லாநிலைகளிலும் தன்னை வெளிப்படுத்துகிறான் என்கிற திருவிளையாடல் விளக்கங்கள் இன்று சமுக உள்வாங்கல் என்று மேலைத்தேயத்தவர்கள் கூறுகின்ற கருத்துக்களை ஆன்மீகத்தின் தளத்தில் நின்று மக்களிடை பதிக்கும் செயற்பாடாக அமைந்தது. ஆயினும் மதம் அடக்குமுறையாளர்களின் கருவியாகிய காலங்களில் இவை மறக்கப்பட்டன. அக்காலங்களில் நமது பெரியோர்களும் ஆன்மீக வளர்ச்சியுற்றோரும் காலத்துக்கு காலம் மதத்தையே சமுக உள்வாங்கலுக்கான அடித்தளமாகக் கொண்டே தங்கள் சமுக மாற்றங்களை தேசப்பணிகளை முன்னெடுத்தனர். எனவே தமிழர் மரபில் சமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கல் என்பது ஆன்மீகசிந்தனைகளுடன் இணைந்தது என்பதை நாம் என்றுமே மறக்கக் கூடாது. இதனால் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென நம் முன்னோர்கள் கூறினார்கள்



கோயிலே தமிழர் சமுக அமைப்பில் வங்கியாக கல்விகலை நிறுவனமாக சமுக பாதுகாப்பு நிலையமாக மக்கள் நல்வாழ்வு மையமாக தேசத்தின் பாதுகாப்பு அரணாக திகழ்ந்து சமுக உள்வாங்கலுக்கு தலைமை தாங்கியது. இந்த அமைப்பு முறை பின்னர் திட்டமிட்ட வகையில் அதே ஆன்மீகத்தின் ஊடாகவே பெண்ணுக்கும் இனத்துக்கும் மண்ணுக்கும் எதிரான பெண் ஒடுக்குமுறை சாதியம் பிற ஆட்சியாளர்களை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற கருத்துக்கள் வளர்க்கப்படுவதற்கான எதிரிகளின் தந்திரோபாயங்களும் மேற்கொள்ளப்பட்டன. எனவே பண்பாட்டு மீட்டுணர்வூடாகவே தமிழர்களின் சமுக உள்வாங்கல் முறைமைகளும் தோற்றம் பெற வேண்டும் வளர்க்கப்படல் வேண்டுமென்பதற்காவே இவை குறித்து இங்கு எழுத வேண்டிய தேவை ஏற்படுகிறது. மேலும் சிறுவர்களின் மன உணர்வுகளை மதித்து அவர்களை வளர்த்தல் என்பதும் நம்முன்னோர்கள் அன்றே போற்றிய வளர்ப்பு முறை. வள்ளுவர்

**மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்**
**சொல் கேட்டல் இன்பம் செவிக்கு**

என்னும் குறளிலே பிள்ளைகளை அணைத்து அரவணைத்து வளர்க்கையில் பெற்றோர்கள் மனஅழுத்தங்களை மனக்கவலைகளை மறந்து தமது உடலில் சுகத்தை இன்பத்தை அடைகின்றனர். அவ்வாறே பிள்ளைகள் சொல் கேட்கையில் அந்தச் சொல்லிலே வெளிப்படும் தேடலை உணர்கையில் தெளிவைப் புரிகையில் கலைத்துவத்தைக் காண்கையில் பெற்றோர்கள் பிள்ளையின் சொல்லைக் கேட்டு ஆகா எம் பிள்ளை அறிவுடையவனாக உயர்கின்றான் என்று உள்ளம் மகிழ்வர் என்கிறார் வள்ளுவர். பிள்ளைகளின் சொல்லை அலட்சியம் செய்வதோ அல்லது அடக்குவதோ நல்ல வளர்ப்பு முறையில்லை என்பது வள்ளுவர் தரும் விளக்கம். ஆகவே சிறுவர்கள் உருவில் சிறியவர்களானாலும் உணர்வில் சிறியவர்கள் அல்ல என்ற உணர்வுடன் வாழ்தல் அவசியம்.

## சக்தியளித்தல் என்பது விடுதலைக்கான அறிவை வளர்த்தலே

இறுதியாக பெண்களுக்கான சிறுவர்களுக்கான சக்தியளித்தல் என்பதினால் எதனை விளங்கிக் கொள்ளலாம். இது எந்த அளவுக்கு நடைமுறையில் முன்னெடுக்கப்படுகிறது? பெண்களினதும் குழந்தைகளினதும் இளையவர்களினதும் உண்மையான சக்தியை எது வழங்குகிறது? உண்மையில் பெண்களும் குழந்தைகளும் நல்வாழ்வு காணுதல் என்பது மண்ணின் இனத்தின் சுதந்திர நிலையின் சார்புள்ளது. எனவே விடுதலை குறித்த அறிவு வளர்க்கப்படல் மிக அவசியம். மேலும் தனிமனித வாழ்வில் பெண் குழந்தை ஆண் என்கிற நிலைகள் அவரவர் திறமைகளை மதிப்பதினாலேயே சமத்துவத்துடனும் சகோதரத்துவத்துடனும் இன்புறு உறவாக தொடர்ந்திட முடியும். இதற்கான சிந்தனையை வளர்க்கும் அறிவை சமுகத்திற்கு அளித்து அந்த சிந்தனையை செயல்படுத்தி வாழ்பவர்களுக்கான சமுக பொருளாதார அரசியல் பாதுகாப்பை அளித்தலே உண்மையான முறையில் பெண்ணுக்கும் சிறுவர்களுக்கும் சக்தியளித்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணும் தமிழரும்







பண்ணோடு பிறந்தது தமிழர் வாழ்வு. இறைவனை நாதவடிவமாக நாதப்பிரம்மமாகக் கண்டவர்கள் தமிழர். தாய்வயிற்றுக் கருவும் ஓசைஉணருமென அன்றே வளைகாப்பு வைத்த பரம்பரை தமிழர் பரம்பரை. இன்று தாய்வயிற்று இருக்கும் குழந்தை தாய் தந்தையின் ஓசைகளை இனங்காண்கிறது என ஊடுருவிக்கதிர்ப்பரிசோதைனைகள் மூலம் விஞ்ஞானம் கண்டறியும் உண்மைகளைத் தம் வாழ்வியல் அனுபவங்களாலும் மெய்யுணர்வாலும் அன்றே கண்டவர் நம் தமிழர். கரு உயிர்ப்பிலேயே இசை ஊட்டிய நம் தமிழர் குழந்தை பிறந்தது முதல் தாயின் தாலாட்டு ஓசையுடன் கண்ணுறக்கம் கொள்ளும் தமிழனாகத் தமிழிச்சியாகவே நம்மை வளர்த்தனர். அவ்வாறே மணவினையை மங்கல மேளம் கொட்டித் தொடங்கும் தமிழன் பிணமனையிலும் பறைகொட்டிப் பாடைசுமக்கும் பண்பாட்டை தாளஇசையை தனது வாழ்வின் எல்லா நிலைகளிலும் தனக்குத் துணையாகக் கொள்ளும் தன்மையைக் கொண்டவர் தமிழர். இவ்வாறு தமிழனோடு வளர்ந்த தமிழ் இசை இன்று தமிழனில் இருந்து தூரப் பொருளாக்கப்பட்டு விட்ட பரிதாபத்தைக் காண்கின்றோம். தெலுங்குச் சொற்களில் சுழல்கிறது நம் இசை. புரியாத மொழிக்கு அடிபிசகாது ஆடும் நடனமாக மாறி நிற்கிறது நமது நாட்டியங்கள். இந்நிலையில் நம் தமிழிசையின் தொன்மையை நம் ஆடற்கலையின் தன்மையை நானறிந்த அளவில் தொட்டுக் காட்டுவதே இப்படைப்பின் நோக்கு. மீளவும் தமிழிசை துளிர்க்கும் இசைநிகழ்வுகளும் தமிழ் மொழிப்பாடல்கள் பயிலும் பரதமேடைகளும் தோன்ற வேண்டுமென்பதே இக்கட்டுரையின் இலக்கு.



கானப்பறவை கலகலவெனு மோசையிலும்
காற்று மரங்களிடை காட்டு மிசைகளிலும்
ஆற்றுநீரோசை அருவியொலியினிலும்
நீலப்பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத்திடையே யுதிக்கு மிசையினிலும்
மானுடப்பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப்பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றுநீர்ப்பாட்டி னிசையினிலும் நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்
சுண்ணமிடிப்பார் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டியிசைத்திடுமோர் கூட்டமுதப்பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுதலாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்

பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்

எனப் பாரதி தன் குயில் பாட்டினிலே பாட்டு எங்கே பிறக்கிறது இசை எங்கே உருவாகிறது என்பதனை மிக அழகாகக் காட்டுகிறான். நம்வாழ்வோடு கலந்தது பண்ணும் பரதமும் அதற்கு வேற்றுமொழி தேவையா? எண்ணிப்பாருங்கள்.



எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்

பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின் மேல்

போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவி தன்

வாக்கினால் ஆடரங்கின் வந்து

என இளங்கோ சிலப்திகாரத்திலே மாதவச் செல்வி முத்தமிழ்க்கலைமகள் மாதவி அரங்கத்தில் தோன்றுதல் என்பது நம் முத்தமிழினதும் வெளிப்பாடாக அமைவதாகக் கூறுகிறார். இதன் மூலம் கலைகளில் ஆற்றல் உள்ள நம் தமிழ்ப் பெண்களே முத்தமிழின் திருவுருவம் என்கிற உண்மையை இளங்கோ எடுத்தியம்புகிறான். இந்த எங்கள் தமிழ்ப் பெண்கள் வாய்மொழி வளரும் தமிழிசையை விட வேற்று மொழி கொண்டெழு இசைகள் நம் தான்மையை விளக்கிடுமா? குமரகுருபரர் சகலகலாவல்லி மாலையிலே பண்ணும் பரதமும் தீன்சொற் பனுவலும் எனச் சொன்ன அந்த மொழியினை தமிழ் முத்தமிழாக வாழும் மொழி என்ற தகைமையை நாம் ஏன் மறுத்து தமிழுக்கு தெலுங்கும் பிறமொழி நாட்டிய நூல்களுமே இசைக்கும் ஆடலுக்கும் வழிகாட்ட வேண்டுமென்ற நிலையை உருவாக்குகின்றோம்.

தமிழிசையின் வரலாற்றுக் காலம் என்பது கிறிஸ்துவுக்கு முன் 3ம்நூற்றாண்டு முதல் கிறிஸ்துவுக்குப் பின் 6ம் 7ம் நூற்றாண்டு வரையிலான காலமாக உள்ளது. இக்காலத்தில் தமிழிசையும் தமிழர் ஆடற்கலையும் தன் தனித்துவத்தை வெளிப்படுத்தி உயர்ந்து சென்று தன்னிடைப்புகுந்த பிறமொழிக்கலப்புடன் போரடி தமிழிசை மீட்சிக் காலமாகப் பக்தி இலக்கிய காலத்தை மாற்றி பின்னர் தமிழர் ஆட்சியின் வீழ்ச்சியுடன் பின்னடைந்து கர்நாடக சங்கீதத்தின் உள்ளும் பரதநாட்டியத்துள்ளும் சங்கமமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியில் பயின்று வந்த பழந்தமிழ் இசைச்சொற்கள் எல்லாம் வடமொழிப் பெயர் பெறும் புதிய காலம் தமிழரின் ஆட்சி வீழ்ச்சியுடன் ஆரம்பமாகியது.


| தமிழ் இசைவடிவம் | கர்நாடக இசை வடிவம் |
|---|---|
| பண் (paN) | ராகம் (rAgam) |
| பதம் (padham) | சுரம் (swaram) |
| தாளம் (thALam) | தாளம் |
| ஆர்ஓசை (ArOchai) | ஆரோகணம;(ArOhaNam) |
| ஆமர்ஓசை(amarOchai) | அவரோகணம (avarOhaNam) |

( அவ்வாறே பதம் ஏழும் தமிழ் பெயர்கள் மாற்றப்பட்டு வடமொழி வடிவு பெறுகிறது)

(padham Ezu - kural thuththam kaikkiLai uzai iLi viLari thAram

saptha swaram - shadjam R^ishabham gAn^dhAram madhyamam panychamam dhaivatham nishadham)

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டிலே தமிழர்களின் இசைக்கருவிகள் குறித்து நிறையவே பேசப்படுகிறது. முரசுகளின் வகைகள் தண்ணுமை எனப்படும் இன்றைய மிருதங்கத்திற்கு சமமான இசைக்கருவி பல்வகை யாழ்கள் எனப்பல செய்திகள் பரிபாடல் நற்றிணை அகநானூறு உட்படப் பல சங்க இலககியங்களிலும் உண்டு.



நம் தமிழ்ப் பெரியார் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் தமிழகத்தில் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தை நிறுவும்படி கேட்டமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று யாழ்ப்பாணத்து தமிழ் அரசர்கள் சங்கவெளி எனும் வெளியை பல்கலைக்கழகம் அமைக்கவென ஒக்ஸ்வேர்ட் பல்கலைக்கழகம் உருவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியிலேயே கொடுத்தனர். ஆனால் அது நிறைவேறாது அந்தப்பகுதி சங்குவெளி என்னும் கிராமமாயிற்று. இதனால் தமிழர்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்றின் தேவையை சுவாமி வலியுறுத்தி நம்முன்னோர் கனவு நனவாகச் செய்தார். அதன் தமிழ்த்துறைத் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

அடுத்து தமிழிசையை மீள்வித்தலின் அவசியத்தை சுவாமி விபுலாநந்தர் உணர்ந்து யாழ் நூல் என்னும் அற்புதமான நூலைச் சங்க இலக்கியங்களை ஆராய்ந்து எழுதினார். அத்துடன் நடைமுறையில் தமிழ் பண்கள் பதங்கள் பயின்று வரவைக்கும் முயற்சியாக அண்ணாமலைத் தமிழிசைக் கல்லூரியை நிறுவினார். ஆனால் ஆழ்வார்ப்பேட்டை மியூசிக் அக்கடெமியை பிராமணியப் பின்னணியில் கர்நாடக இசையின் காவலர்கள் எனத் தம்மை கூறிக்கொண்டவர்கள் அமைத்து அடிகளின் முயற்சிக்கு ஊறுகள் விளைவித்ததினால் அடிகள் தாயகம் திரும்பி பேராதனைப் பல்கலைக்கழகத்து தமிழ்ப்பேராசிரியராக அமர்ந்தார்.



விபுலாநந்தரின் முயற்சியாலேயே அதுவரை பாரதியை மறந்திருந்த தமிழகம் பாரதியின் தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது. 1921ல் மறைந்த பாரதி மீண்டெழுந்தான் பாடல் உருவில். கல்கி கூட தமிழிசையை மீட்கப் பல முயற்சிகளைச் செய்தார். அத்துடன் அவரின் சரித்திரநாவல்களில் நம்தமிழிசை ஆடற்கலை குறித்த பலசம்பவங்களைப் படைத்து மக்களிடை தமிழிசை தமிழ் நாட்டிய மீட்புணர்வைத் தோற்றுவித்தார்.

இவ்வாறாக அன்று முதல் இன்று வரை தமிழிசை மீட்பு முயற்சிகள் தொடர்கின்றன. அடுத்து பரதக் கலை எவ்வாறு நம் கலையாக இருந்து வந்த தப்பாட்டம் சதிராட்டம் போன்ற கலைகளில் உள்ள பாவம் ராகம் நாட்டியம் என்ற மூன்றும் இணைக்கப்பட்டு அந்தக் கலையின் பரதம் என்ற தமிழ்ப்பெயர் பரதநாட்டியமாக மாற்றப் பட்டு வேத்தவைக் கலையாக உருமாற்றப்பட்டது என்பது குறித்து எடுத்து நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உதைபந்தாட்டப் போட்டியின் சிறப்பு விருதுகள்

பிரேசிலும் ஸ்பெயினும் நேர்மை நீதியான விளையாட்டுக்கான (Fair Play) 2006ம் ஆண்டு உலக கிண்ண உதைபந்தாட்ட விருதினைப் பெற்றன. இவ்விரு நாடுகளின் குழுக்களும் பெற வேண்டிய மொத்தப் புள்ளிகளான 1000ல் 886 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டன.




உலக உதைபந்தாட்டங்களின் பொழுது பங்கு பற்றும் விளையாட்டுக் குழுக்களில் 16வது சுற்றினை அடைந்த பின் நேர்மை நீதியான விளையாட்டு விளையாட்டு வீரத்திற்குரிய மனோநிலை விளையாட்டு மைதானத்தின் உள்ளேயும் வெளியேயும் நல்ல நடத்தை ஆகியனவற்றை உலக உதைபந்தாட்டச் சங்கத்தின் தொழில்நுட்பக் குழுவொன்று தொடர்ச்சியாக அவதானித்து அதன் அடிப்படையில் குழுக்களுக்குப் புள்ளிகள் வழங்கப்பட்டு விருதுக்குரிய குழு தெரிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த விருதினைப் பெறும் குழுவுக்கு 50000 அமெரிக்க டொலர்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகிறது. 1986ல் மெக்சிக்கோவிலும் 1994ல் அமெரிக்காவிலும் நடந்த உலககிண்ணப் போட்டிகளிலும் பிரேஸில் நேர்மை நீதிக்கான விருதினைப் பெற்றது. அந்த வகையில் இம்முறை மூன்றாவது தடவையாக பிரேஸில் இவ்விருதினை மீளவும் பெற்றுள்ளது. 1990ல் இத்தாலியில் நடந்த உலக கிண்ணப்போட்டியில் இங்கிலாந்தும் 1998ல் பிரான்சில் நடந்த போட்டியில் இங்கிலாந்தும் பிரான்சும் 2002ல் கொரியா யப்பானில் நடந்த போட்டியில் பெல்ஜியமும் இந்த விருதினைப் பெற்றன.




அதே வேளை சிறந்த உதைபந்தாட்ட வீரர்க்கான அடிடாஸ் தங்கப்பந்து ( Aadidas golden Ball) பிரான்சு அணியின் தலைவர் சிடான் சினடினுக்கு(ZIDANE Zinedine) கிடைத்துள்ளது. வெள்ளிப்பந்தும் பித்தளைப் பந்தும் முறையே இத்தாலியைச் சேர்ந்த கன்வரோ வேபியோவுக்கும் (CANNAVARO Fabio ) பிர்லோ அந்திரேக்கும் (PIRLO Andrea) கிடைத்துள்ளன.













அதிக கோல்களை அடிப்பவர்களுக்கான தங்கப் பாதுகை ஜேர்மனியின் கேலொஸ் மிரோசிலவ்( (KLOSE Miroslav) க்கு 5 கோல்களை அடித்தமைக்காகவும் வெள்ளிப் பாதுகை ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த கிரஸ்போ ஹேர்மன் ( CRESPO Hernan) க்கும் பித்தளைப் பாதுகை பிரேஸிலைச் சேர்ந்த றொனால்டோ (RONALDO) க்கும் தலா 3 கோல்களை அடித்தமைக்காகவும் கிடைத்துள்ளன.



மேலும் ஜேர்மனியின் 21 வயதான இளம் விளையாட்டு வீரர் பிரின்ஸ் போல்டி (Prince Poldi) சிறந்த இளவயது உதைபந்தாட்ட வீரர்க்கான கில்லட் விருதினைப் (Gillette Best Young Player award) பெற்றுள்ளார். போட்டியிட்ட 40 இளவயது உதைபந்தாட்ட வீரர்களிடை இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கிண்ண வெற்றிக் களிப்புத் தந்த தேசிய உணர்வில் திளைத்த இத்தாலி



இத்தாலியத் தேசியக்கொடியை வெளியே பறக்க விட்டபடி தரைஇறங்கியது வென்ற குழுவினரை ஏற்றி வந்த விமானம். இத்தாலிய விமானப்படை விமானங்களும் இத்தாலியத் தேசியக் கொடியின் வர்ணங்களைத் தாங்கிய புகைகளை விடுத்து வானில் பறந்தன.



இத்தாலிய குழுவின் தலைவர் வேபியோ கனவாரோ (Fabio Cannavaro) உலக வெற்றிக்கிண்ணத்தை தாங்கிய வண்ணம் விமானத்தில் இருந்து படியால் இறங்க மக்கள் பேரானந்தப் பெருமகிழ்வில் பேராரவாரம் செய்து ஆனந்தக் கூத்தாடி வரவேற்றனர். இத்தாலியின் வெற்றிக்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவரான இத்தாலிய பந்துத் தடுப்பாளர் ஜினாலுகி பவ்வோன் (Goalkeeper Gianluigi Buffon) படியால் இறங்குவதைக் கண்டதும் மக்கள் மீண்டும் ஆரவாரித்தனர். இத்தாலியின் அதிபர் ஜோர்ஜியோ நெப்பொலிட்டானோ (Giorgio Napolitano) விமானநிலையத்திற்கு நேரில் சென்று வீரர்களை வரவேற்று உலக வெற்றிக்கிண்ணத்தை நேரில் வாங்கி மகிழ்ந்து மதிப்பளித்தார்



இத்தாலியப் பிரதமர் றோமானோ புரோடி (Romano Prodi) விளையாட்டுத்துறை அமைச்சர் ஜிவ்வானோ மெலான்றி (Giovanna Melandri) ஆகியோரும் விமானநிலைய வரவேற்பில் கலந்து கொண்டனர். வீரர்களின் குடும்பத்தவர்கள் பாசமகிழ்வுடன் வரவேற்றனர். வீரர்களை தாங்கிய வாகனம் இத்தாலிய தேசியக் கொடிகள் அசைய மக்கள் வெள்ளத்தில் மிதந்து சென்றமை உலகில் மக்கள் தங்கள் தங்கள் தேசியத்திற்கு காட்டும் உள்ளக் கிளர்ச்சிக்கு வரலாற்று உதாரணமாக பதிவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தையின் ஆய்வறிவை வளர்க்க
உங்களுக்குத் தமிழ் மொழியில் உதவும் மாத இதழ்



# சமகாலம்

## சமுக விஞ்ஞான அறிவியல் மாத இதழ்


முதன்மை ஆசிரியர் Chief Editor :

**S. J. Fatimaharan** MA in Politics of Democracy, BSc (Information Systems and Politics), BA(Tamil ,Political Science , Economic) Special Dip in Social Studies (Oxford) Dip in Housing

இணை ஆசிரியர் Co Editor :

**Rita** Post Graduate Diploma in Housing Post Graduate Diploma in Social Policy BSc (Education &Information Society) BA (Tamil , Economic and Geography)

For Contact : 0044 1865 437 397 e-mail : rfatimaharan @ yahoo.co.uk
39 Napier Road Oxford OX4 3HZ United Kingdom


---



## சம காலத்திற்கு உங்கள் சந்தாவை அனுப்பி விட்டீர்களா

கடந்த காலத்தை அறிந்து கொள்ளவும். - சமகாலத்தை விளங்கிக்கொள்ளவும் - எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளவும் உதவும் என்னும் நோக்கில் தமிழில் வெளிவரத் தொடங்கிய இம்மாத வெளியீட்டுக்கு உங்கள் வருடாந்தச் சந்தாவாகிய 18 பவுண்ஸ்களை

(தபால் செலவு உட்பட) அனுப்பி விட்டீர்களா? இல்லையேல் உடன் அனுப்பி உதவுங்கள். நீங்கள் சந்ததாரராக இருப்பின் தயவுசெய்து மற்றவர்களிடம் இந்நூல் பற்றி எடுத்துச் சொல்லி சந்தாதாரர் பெருக உதவுங்கள். விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. நிதி ஆதரவுகளும் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முகவர்களுக்கும் விளம்பரங்கள் பெற்றுத்தருபவர்களுக்கும் கமிஷன் வழங்கப்படும்.

<u>சந்தாப் படிவம்</u>

பெயர் :........................................ தொலை பேசி இலக்கம் :.......................

முகவரி :..........................................................................................................

ஒரு வருடச் சந்தா 18 பவுண்ஸ் (12 இதழ்களுக்கு) க்கு உரிய காசோலை இத்துடன் இணைத்துள்ளேன். ( காசோலையை **<u>Sama Kaalam</u>** என்ற பெயருக்கு எழுதுங்கள்)

கையொப்பம் :.................................. திகதி : ........................

அனுப்ப வேண்டிய முகவரி :
Samma Kaalam, 39 Napier Road, Oxford, OX4 3HZ, United Kingdom
உங்கள் நிதி ஆதரவு இதழின் வளர்ச்சிக்கு நீங்கள் அளிக்கும் மலர்ச்செண்டு. நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பில் எழுந்தார்

# 1983 ஆடி 23-25



# நெருப்பாய் எழுந்தார்

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் ஆடி 1983 அவர்களை நெருப்பில் விழித்தெழ வைத்த மாதமாக உள்ளது. தமிழர்களின் கிட்டத்தட்ட இருபதினாயிரம் வீடுகள் - இரண்டாயிரத்து முன்னூறு வர்த்தக நிலையங்கள் - 122 தொழிற்சாலைகளின் தீயினால் இலங்கைத் தீவின் நீலவானமே கருமையான மாதம் இந்த 1983 ஆடி மாதம். இந்தப் புள்ளிவிபரங்களை மதிப்பிட்டவர்கள் தமிழர்கள் அல்ல ஜோன் எம் ரிச்சர்ட்சன் மற்றும் எஸ் டபிள்யூ ஆர் டீ ஏ சமரசிங்கி என்கிற ஆய்வாளர்கள். இந்த ஆடி தமிழின அழிப்பின் நோக்குகள் இரண்டு. ஒன்று தமிழர்களை அச்சப்படுத்தி அவர்களின் அரசியல் பணிவைப் பெறுதல் என்பது. அடுத்தது தமிழர்களின் பொருளாதாரத்தைச் சீரழித்து அவர்கள் தங்களது அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிப்பதற்கான மக்கள் அலகாக மாறிவிடாது தடுப்பது. இந்த இரண்டு நோக்கங்களுமே சிங்கள அரசாங்கத்தின் அரசியல் செயற்திட்டங்களாக செயற்படுத்தப்பட்டன என்பதே வேதனையான உண்மை.

இதனை உணர்ந்ததினால் தான் நெருப்பில் விழித்த தமிழர்கள் தங்களையும் தங்கள் தாயகத்தையும் பாதுகாப்பதற்கான நெருப்பாய் எழுந்தார்கள். அதுவே தமிழீழ மண்ணினதும் மக்களினதும் விடுதலை என்கிற தமிழீழ மக்களின் தேசிய எழுச்சி. இதன் மூலம் எந்த ஆடி 1983இனால் தமிழர்களின் அடையாளத்தை அழித்திடலாம் எனச் சிறிலங்கா அரசாங்கம் திட்டம் தீட்டியதோ அதே ஆடி 1983ஐ தமிழர்கள் தங்களின் அடையாளத்தை நிறுவுவதற்கான அடித்தளமாக்கினர் எனலாம்.

சிங்கள இனமும் தன்னுடைய இறைமையை தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் காட்டிய வேகம் வேட்கை காரணமாகவே காலனித்துவத்திடம் இருந்து மீட்டெடுத்தது என்பது வரலாறு. ஆனால் சிங்கள இனத்தின் தன்னை அடையாளப்படுத்தல் என்னும் செயற்பாட்டினை அதன் தலைவர்கள் தமிழ் இனத்துக்கு எதிரான இனவெறியினுடாக வளர்த்தமையே இன்றைய இலங்கைத் தீவின் பிரச்சினைகளுக்கு வித்தாகவும் வேராகவும் உள்ளது. இந்த சிங்கள இனவெறி உணர்வு தமிழர்களை அச்சப்படுத்தி அவர்களின் அரசியல் பணிவை பெறுவதை நியாயப்படுத்துவதற்கான தேவையாகவும் வரலாற்றில் வளர்க்கப்பட்டது. வளர்க்கப்படுகிறது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான சிங்கள இன வெறி உணர்வு என்பது பியதாச சிறிசேனா ( 1875- 1946) 1903ல் தொடங்கிய சிங்கள ஜாதிய மாத இதழ் 1906ல் அனகாரிக தர்மபாலா தொடங்கிய சிங்கள பௌத்தன் செய்தி பத்திரிகை ஆகியவற்றின் மூலம் சாதாரண கிராமிய சிங்கள மக்களின் பரம்பரை உணர்வாக மாற்றப்பட்டது. 1902ல் அனாகரிக தர்மபாலா எழுதிய பழம்பெரும் நாகரீகம் ஒன்றின் வரலாறு என்னும் நூலில் சிங்கள இனம் தமிழர்களாலோ ஐரோப்பியராலோ வெல்லப்படாத அடிமை இரத்தம் இல்லாத இனம் என்ற கருத்தை முதன்மைப்படுத்தினார். "ரட்ட ஜாதிய ஆகம" ( தேசம் இனம் பௌத்த ஆகமம் ) என்பதைச் சிங்கள மக்களின் இரத்த உணர்வாக வளர்த்த அனகாரிக தர்மபாலா 1911ல் சிங்களவர்களின் தேசம் சிங்களவர்களாலேயே ஆளப்படல் வேண்டும் என்ற பிரகடனத்தை விடுத்தார்.

இதனை வலியுறுத்தக் கூடிய வகையில் தமிழர்கள் மலையத் தமிழர்கள் தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் கிறிஸ்தவச் சிங்களவர்கள் ஆகிய அனைவருக்கும் எதிரான பரப்புரைகளை இவர் மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்களுக்கே இலங்கை சொந்தம் என்ற கோட்பாடு பௌத்த சிங்களவர்களுக்கே இலங்கை சொந்தம் என்ற பௌத்தத்துடன் இணைந்த கோட்பாடாக வளர்ச்சியுற்றதை காலனித்துவ விலகலுக்கு முன் நிகழ்ந்த சிங்கள பௌத்தர்களுக்கும் சிங்கள கிறிஸ்தவர்களுக்கும் சிங்களவர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையிலான கலவரங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதன் தொடர்ச்சியாகவே காலனித்துவ விலகலின் பின்னரான மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமைப் பறிப்பும் அமைகிறது.

இலங்கைத் தமிழர்கள் ஆரம்ப பௌத்த சிங்கள இலக்காக மாறாமைக்கு இலங்கைத் தமிழர்கள் காலனித்துவம் என்னும் பொது எதிரியை எதிர்ப்பதில் சிங்களவர்களுடன் இணைந்து நின்றமையும் சிங்கள எழுத்தாளர்கள் படைப்பாளர்களால் கூட இலங்கைத் தமிழர்களின் தாயக உரிமை வெளிப்படுத்தப்பட்டு வந்ததும் காரணமாக உள்ளது. உதாரணமாக ஈ டீ இ சில்வா அக்காலத்திலேயே இலங்கை சிங்களவர்களின் தாயகமாகவும் தேசமாகவும் உள்ளது. அதே வேளை வடக்கு தமிழர்களின் தாயகமாகவும் தேசமாகவும் உள்ளது எனக் கூறியுள்ளதை கலாநிதி மைக்கல் றோபேர்ட்ஸ் சுட்டிக்காட்டியுள்ளதைக் கூறலாம். (அன்று வடக்கு என்பது கிழக்கையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண அரசினைக் குறிக்கும் சொற்றொடராக இருந்தது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாண அரசர்கள் என்னும் சொல் தமிழர் தாயகம் முழுவதற்குமான அரசின் இறைமையாளரைக் குறித்தது போலவே வடக்கு என்னும் சொல்லும் யாழ்ப்பாண அரசின் தலைநகரமிருந்த வடக்கின் பின்னணியில் தமிழர்களின் அரசைக் குறிப்பதாக உள்ளது. அதனால் தான் சிங்களக் காடையர்கள் அடிக்கும் பொழுதும் யாப்பானயற்ற யன்ட என்றே தமிழர்களுக்கு அமத்தார்கள்.) மேலும் சிங்களத் தேசமும் சிங்கள இறைமையும் சிங்கள மொழியும் சிங்கள கலாச்சாரமும் பௌத்த மதமும் உருவாவதில் தமிழர் தேசமும் தமிழர் இறைமையும் தமிழ் மொழியும் தமிழர் ஆன்மீகமும் ஆற்றிய இணைப் பணிகளை மறுக்கவும் மறக்கவும் முடியாமல் ஆரம்ப காலச் சிங்கள பௌத்த தேசியவாதிகள் தவித்தனர். ஆனாலும் சரியாக 75 ஆண்டுகளுக்கு முன் 1931ல் டொனமூர் அரசியல் அமைப்பின் மூலமும் அனைத்து மக்களுக்கான வாக்குரிமையின் மூலமும் காலனித்துவ பிரித்தானிய அரசாங்கம் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் ஒன்று இலங்கைத் தீவில் தோன்றுவதற்கு வழிசெய்ததின் பின்னர் இலங்கைத் தமிழர்களும் சிங்கள பௌத்த தேசியவாதிகளால் தம்மிலிருந்து (us) வேறுபட்டவர்கள் (Others) என்கிற அரசியல் கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டு சிங்கள பௌத்த மேலாண்மையை இலங்கை முழுவதும் நிறுவுவதற்கான அரசியல் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில் தமிழின அழிப்பு என்பது தமிழர்களை அச்சப்படுத்தி அவர்களின் அரசியல் பணிவைப் பெறல் என்கிற அரசியல் நோக்கிலான செயற்பாடாக சிங்கள பௌத்த அரசியலில் பரிணாமம் பெற்றுள்ளது. இந்த இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற அடிப்படையில் தான் ஒரு புத்த துறவியான எல்லே குணவம்சவினால் (Elle Gunavamsa)

வாளை உறையிலிருந்து உருவியாயிற்று
அதனை இரத்தத்தால் குளிப்பாட்டாது உறையிடாதே
நான் என் உதிரத்தை உனக்கு பாலாக ஊட்டியது
எனக்காக அல்ல தேசத்திற்காகவே
எனது வீரமும் புத்திக்கூர்மையுமுள்ள போர்வீர மகனே
வீட்டை விட்டு வெளியேறி தாய்நாட்டைப் பாதுகாத்திடு
திறமையுடன் செயற்பட்டால் போதும்
அடுத்த பிறவியில் நீ நிர்வாணத்தை அடைவாய்

என துணிந்து பாட அதனை அரசாங்கம் அச்சடித்துக் கொடுத்து புனிதப் போருக்கு சிங்கள மக்களை ஆயத்தம் செய்ய முடிகிறது. எனவே சிங்கள பௌத்த மேலாண்மை மனோநிலையில் தமிழர்களை அழித்தல் என்பது புனிதச் செயற்பாடாக புத்தத்துவத்தை அடைகின்ற ஒன்றாக உணரப்படுகிறது. இதனால் தான் சிறிமாவோ பண்டாரநாயக்கா 1960 யூலை தேர்தலில் தனது கணவர் ஒரு போதிசத்துவர் எனவும் அதனாலேயே புத்த மதத்திற்காகவும் சிங்களவர்களுக்காகவும் தனது உயிரையே கொடுத்தார் எனப் பரப்புரை செய்து நாட்டின் தலைவியாக முடிந்தத.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தத்துவத்தை அடைதல் என்பது புத்தர் தமக்களித்த நாட்டை மொழியைக் கலாச்சாரத்தைக் காத்தலில் என்பது சிறிலங்கா பௌத்தத்தின் தம்ம போதனைகளில் ஒன்றாகிவிட்டது. அவ்வாறே சிறிலங்கா இடதுசாரிகள் பௌத்த சிங்கள இடதுசாரித்துவம் என்கிற ஒரு கோட்பாட்டையும் உருவாக்கியமை பௌத்தத்தின் அறவழியினால் மட்டுமல்லாது இடதுசாரிகளின் சர்வதேச சமத்துவ உணர்வாலும் தமிழர்களின் சமத்துவத்தை இலங்கையில் பேண முடியாத நிலை உருவாகியது. எனவே தமிழர்களுக்கு எதிரான செயற்பாடு என்பது சிங்கள இனத்தினதும் பௌத்தத்தினதும் உயர்வுக்கான போக்கு என்ற நோக்கு சிங்கள இனத்தின் அடிப்படை சமுக பொருளாதார அரசியல் ஆன்மீக கொள்கையாக்கப்பட்டு விட்டது. இந்த சிங்கள இனத்தின் கொள்கையே 1956 1958 1977 1981 தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு காரணமாகி 1983ல் தமிழர்களை நெருப்பில் எழவைக்கும் மாதமாக்கியது. இதன்வழி தமிழர்கள் தங்கள் தாயகத்தை தங்கள் வாழ்வை தங்கள் அரசியல் எதிர்காலத்தைக் காக்க நெருப்பாய் எழவேண்டிய வரலாற்றுத் தேவையும் தோற்றுவிக்கப்பட்டது.

மேலும் சிங்கள இனத்திடை முதல் முழுநோக்காக தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்தல் என்னும் கோட்பாடு இனவெறியின் பொருளாதார அம்சமாக திட்டமிட்டமுறையில் வளர்க்கப்பட்டது. 1958ல் வெளிப்படையாக இனக்கலவரத்தின் மூலம் தொடக்கப்பெற்ற இந்த தமிழர் பொருளாதார அழிப்பு என்னும் மனிதாயத்திற்கு எதிரான செயற்பாடு அதனுடைய வெள்ளிவிழா ஆண்டான 1983 ஆடி இனஅழிப்பின் பொழுது உச்சக்கட்டத்தை அடைந்தது.

ஆயினும் இந்த தமிழர் பொருளாதாரத்தினை அழித்தல் என்பது உணர்ச்சிகளால் தூண்டப்பெற்ற செயற்பாடல்ல உணர்வு பூர்வமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அரசியல் செயற்பாடு. இதனை 1983 ஆடி இன அழிப்பின் முன்னுக்கும் பின்னுக்குமான உட்கட்டுமான அழிப்புகளை ஆய்வுசெய்த ஜோன் எம் ரிச்சர்ட்சன் மற்றும் எஸ் டபிள்யூ ஆர் டீ ஏ சமரசிங்கி ஆகியோரின் புள்ளிவிபரங்கள் தெளிவாக்குகின்றன. ஆடி 1983ன் உட்கட்டுமான அழிப்பு 953 மில்லியன் ரூபாக்கள் என்றால் அதற்கு முன் 1983 தை முதல் 1983 ஆனி வரையில் தமிழர் தாயகமாகிய வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட உட்கட்டுமான அழிப்பு 23300 மில்லியன் ரூபாக்கள். அவ்வாறே ஆடி இனக்கலவரத்தின் பின் அதாவது 1983 ஆடி 1983 முதல் மார்கழி 1988 வரை தமிழர் தாயகப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட உட்கட்டுமான இழப்பு 12700 மில்லியன் ரூபாக்கள். என்பது ஜோன் எம் ரிச்சர்ட்சன் மற்றும் எஸ் டபிள்யூ ஆர் டீ ஏ சமரசிங்கி தந்த புள்ளிவிபரமாக எஸ் டபிள்யூ ஆர் டீ ஏ சமரசிங்கியும் றீட் கொக்லனும் ஆசிரியத்துவம் செய்த நூலாகிய இனக்கலவரத்தின் பொருளாதாரப் பரிமாணம் - சர்வதேசப் பார்வை (Economic dimensions of Ethnic Conflict – International Perspectives – edited by S.W.R.DE A. Samarasinghe and Reed Coughlan) என்னும் நூலில் பக்கம் 201ல் தெரிவித்துள்ளனர். இந்தப் புள்ளிவிபரங்கள் ஆடி 1983 இனஅழிப்பின் உட்கட்டுமான இழப்பை விட பலமடங்கு அதிகளவிலான உட்கட்டுமான இழப்பு தமிழர் தாயகப் பகுதிகளில் ஆடிக்கலவரத்திற்கு முன்னும் பின்னும் தொடர்ந்ததை எடுத்துக்காட்டுகிறது. இந்த தமிழர் தாயகத்தின் உட்கட்டுமான அழிப்பை தமிழர்கள் இந்த தாயகப் பகுதிகளில் தோற்றுவித்த அரசுநோக்கிய அரசே தடுத்து நிறுத்தும் பணியை செய்தது செய்கிறது என்பது வரலாறு உணர்த்தியுள்ள உண்மை.

எனவே தான் தமிழர்கள் தங்களின் இந்த அரசுநோக்கிய அரசுக்கு சர்வதேச உலகு கொடுக்கும் அங்கீகாரம் ஒன்று தான் சிங்கள பௌத்த மேலாண்மை தங்கள் பகுதிகளில் மேற்கொள்ளக் கூடிய உட்கட்டுமான அழிப்புகளை இல்லாது செய்யும் தன்மையினை ஏற்படுத்துமென உறுதியாக நம்புகின்றனர். அவ்வாறே இந்த சர்வதேச அங்கீகாரம் தமிழர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் பாதுகாப்பான அமைதியான வாழ்வுக்கும் சர்வதேச உறவுகளுக்குமான நிபந்தனையாகவும் மாறியுள்ளது. இதனால் தமிழர்கள் 1983 ஆடியில் நெருப்பில் எழுந்தார் அதன் விளைவாக நெருப்பாய் எழுந்தார் என்பது தமிழர்கள் வரலாறாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாற்றல் குறித்து ஒரு பார்வை



**சிற்பி செய்வதைச் சிந்தனையில் செய்பவன் படைப்பாளி**

புதிய எண்ணங்கள் கொள்கைகள் குறித்த மனப்போக்கு அல்லது இருக்கின்ற எண்ணக்கருக்கள் குறித்த புதிய மனக் கருத்துக்கள் படைப்பாற்றல் எனப்படும். இது ஒருவருடைய நடத்தை உளவியல் சமுகஉளவியல் உளவியல் அளவீடுகளை மதிப்பீடு செய்யும் கொள்கைகள் முறைமைகள் ஒருவருடைய உள்ள ஆழம் புத்திக்கூர்மை தத்துவங்கள் பொருளாதாரம் ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வு வடிவங்கள் வர்த்தகம் நிர்வாகம் ஆகிய பலதுறைகளை உள்ளடக்கியதாக உள்ளது. நாளாந்தப் படைப்பாக்கல்திறன் விதிவிலக்கான படைப்பாக்கல்திறன் செயற்கையான படைப்பாக்கல்திறன் என படைப்பாக்கல் திறன் மூவகையினதாக கருதப்படுகிறது. தெய்வீகத் தலையீடுகள் புத்திசாதுரியங்கள் சமூக சூழ்நிலைகள் ஆளுமை தன்மைகள் சந்தர்ப்பங்கள் என்பன ஒருவரின் படைப்பாக்கல் தன்மைக்கு காரணமாகிறது என்பர். இதனால் படைப்பாக்கல் திறன் பரம்பரையலகுகள் உளநோய்கள் மற்றவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தல் என்பவற்றுடன் தொடர்பானது என்றும் கருதப்படுகிறது. இதனால்தான் படைப்பாற்றல் என்பது நாம் பிறக்கும் பொழுதே எமக்குக் கொடுக்கப்படும் கொடை என ஒரு சாரரும் நுட்பங்களுடாக பயிற்றுவிக்கப்படும் வளர்க்கப்படும் கலை என ஒரு சாரரும் என்று வாதாடுகின்றனர். நாம் அறிந்தவைகளை மறுசீரமைத்து நமக்குத் தெரியாதவைகளை அறிய முற்படும் போக்கே படைப்பாற்றல் திறன் என்கிற கருத்தை ஜோர்ஜ் கில்லர் என்கிற அறிஞர் கூறியுள்ளமையை இவ்விடத்தில் நினைவுறுத்தல் நல்லது. படைப்பாக்கத் தந்திரோபாயங்கள் சிலவற்றை அடுத்து நோக்குவோம்.

1. நோக்கத்தையும் இலக்கையும் நிறுவிக்கொள்ளுதல்
2. அடிப்படை ஆற்றல்களை கட்டி எழுப்புதல்
3. குறித்த பகுதி குறித்த அறிவைப் பெருக்குதல்
4. தேடல் குறித்து பாராட்டுதல்களை உங்களுக்கு நீங்களே வழங்குதல்
5. உள்ள ஆற்றல்களை வளர்த்தல்
6. சவால்களைச் சந்திக்க உங்களை உறுதிப்படுத்தி ஊக்கப்படுத்தல்
7. உங்களது திறமைகளுடன் நீங்களே போட்டியிட்டு உங்கள் மேலாண்மையை வளர்த்தல்
8. படைப்பாற்றலுக்கு ஆதராவன நம்பிக்கைகளை வளர்த்தல்
9. தெரிவுகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் இடம் கொடுத்தல்
10. தன் ஆளுமையை வளர்த்தல்
11. படைப்பாற்றலுக்கான உத்திகளைப் படித்தல் பயிற்சி செய்தல்
12. நடுநிலைமையான மனநிலையை பயிற்றுவித்தல்

இனி நாவல் சிறுகதை கவிதை நாடகம் கட்டுரை என்னும் புனைகதை வடிவங்களைச் சுருக்கமாக எடுத்து நோக்குவோம். **நாவல்** என்பது நீண்ட உரைநடைப் புனைகதை. பல கதாபாத்திரங்கள். பல சிக்கல்கள் சம்பவம் ஒன்றில் தொடங்கி சம்பவ விளக்கங்கள் ஊடாக உயர்ந்து சென்று முரண்கள் பலவற்றைத் தோற்றுவித்து உச்சக்கட்டத்தை அடைந்து செயல்களின் விளக்கங்கள் குறைந்து முடிவுக்கு வரும். **சிறுகதை** என்பது ஒன்றை சுருக்கமாக உறைப்பாக கலைத்துவத்துடன் விபரிக்கும் தந்திரோபாயம். **கவிதை** என்பது உள்ளத்து உள்ளது இன்பம் உருவெடுப்பது தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை தெளிந்துரைப்பது ஆகும். படைப்பாக்கல் திறன் சிறப்பாக வெளிப்படுவது கவிதையில்தான் என்பர். மேலும் படைப்பாக்கல் திறன்களுள் முதன்மையானது கவித்துவமே. இதற்கு காரணம் உள்ளத்து உணர்ச்சிகளை சுதந்திரமாக வெளியிடும் தன்மையே ஆகும். **நாடகம்** உணர்ச்சியுடன் சம்பவத்தை பாவங்களால் வெளிப்படுத்தும் படைப்பாக்கல் துறை. **கட்டுரை** உணர்வுடன் ஆனால் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் கருத்தை வெளியிடல். சுருக்கமாக கூறுவதற்கும் விரிவாக கூறுவதற்கும் ஏற்ற தளம். மற்றையவற்றை விட யதார்த்த தன்மையை அதிகமாக கொண்ட படைப்பு என்பதால் சிலர் இதனைப் படைப்பாற்றல் என்று கூறாது விவரணம் அல்லது திறனாய்வு அல்லது ஆராய்வு என்று கூறுவதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# π என்னும் கணிதக் குறியீட்டின் வரலாறு

**π** கணித உலகின் முக்கியத்துவமான குறியீடு. கிரேக்க எழுத்துக்களில் 16வது எழுத்தின் சிறிய நிலை (Lower Case) ஆக அமைந்துள்ளது. பை என்னும் தமிழ் எழுத்தின் ஓசையே கிட்டத்தட்ட இந்தக் கிரேக்க எழுத்துக்குச் சமானமான ஓசை உடையதாக உள்ளது.



வட்டமொன்றின் சுற்றளவுக்கும் அவ்வட்டத்தின் விட்டத்திற்கும் இடையிலுள்ள விகிதம் மாறாது 7 ⅓ என்பது கி மு 325 முதல் 265 வரை வாழ்ந்த கிரேக்க கணிதவியலாளர் யுக்கிளிட்டினால் (**Euclid**) அறிமுகப்படுத்தப்பட்டதாக கணித வரலாறு கருதுகிறது. இந்த மாறாவிகிதத்தை ஆக்கிமிட்டிஸ் கோளத்தின் கனத்தைக் கணிப்பதில் பயன்படுத்திய பின் இம்மாறிலி ஆக்கிமிட்டிசின் மாறிலி எனவும் அழைக்கப்பட்டது.



ஆயினும் இங்கிலாந்தின் வேல்ஸில் 1675 முதல் 1749 வரை வாழ்ந்த கணிதவியலாளர் சேர் வில்லியம் ஜோண்சின் ( Sir *William Jones*) 1706ல் எழுதப்பட்ட கணிதத்திற்குப் புதிய அறிமுகம் என்னும் நூலில்தான் **π** என்னும் கிரேக்க எழுத்தை ஆக்கிமிட்டிசின் மாறிலிக்கு அடையாளமாக முதன் முதலில்



இருந்த போதிலும் சுவிஸ்லாந்தில் 1707ல் பிறந்து 1783ல் இரஸ்யாவில் இறந்த சுவிசின் கணிதவியலாளர் லியொன்ஹார்ட் ஓயிலர் (Leonhard Euler) அவர்களால்தான் **π** என்னும் குறியீடு வட்டமொன்றின் சுற்றளவுக்கும் அவ்வட்டத்தின் விட்டத்திற்கும் இடையில் உள்ள மாறாவிகிதமான 3.14159... என்பதைக் குறிக்கும் அடையாளமாக உலகில் பிரபல்யப்படுத்தப்பட்டது என்பதே பல கணித ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. .

எனினும் பாட்டாளிபுர என அன்று அழைக்கப்பட்ட இன்றைய இந்தியாவின் பட்னாவில் 476 முதல் 550 வரை வாழ்ந்த ஆரியபட்டா யுக்கிளிட்டுக்கு முன்னரே கியாமிதி (Gyaamiti) என்ற பெயரில் கேத்திர கணிதவியலைத் தோற்றுவித்து விட்டாரெனவும் இவரே முதன் முதலில் வட்டமொன்றின் சுற்றளவுக்கும் அவ்வட்டத்தின் விட்டத்திற்கும் இடையில் உள்ள மாறாவிகிதத்தைக் குறித்த கணிதச் சிந்தனையினை தோற்றுவித்தவரெனவும் இன்றைய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பபிலோனியர்கள் கிறிஸ்து பிறப்பதற்கு 1900 ஆண்டுகளுக்கு முன்னரே பை குறித்த கணிதச் சிந்தனைக்கு வித்திட்டனர் என்றும் அவர்கள் **π = 25/8** என்ற விகிதத்தை அவர்கள் கொண்டிருந்தனர் எனவும் சீன கணிதவியலாளர் லிய் குயி(Liu Hui) 263 கி பி யிலேயே π =3.1416 என்ற தொடர்பை கூறிவிட்டதாகவும் விவிலியத்தில் 1 அரசர் ஆகமம் 7:23ல் **π = 3** என்ற கருத்து முன்வைக்கப்படுவதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவதும் **π** யின் வரலாறு குறித்த தேடலை ஆய்வுலகத்தில் என்றும் தொடரவைத்தவண்ணம் உள்ளது.

இதற்கிடை அமெரிக்க திகதி முறையில் 3. 14 என எழுதப்படும் மார்ச் 14ம் திகதி **π** இன் பெறுமானம் 3.14.... என்பதினால் பை தினமாகவும் (Pi Day) ஆகவும் கொண்டாடப்பட்டு வருகிறது. மார்ச் 14 இன்றைய நூற்றாண்டின் மாமனிதர் எனப் போற்றப்படும் விஞ்ஞானி அயன்ஸ்டினின் பிறந்த நாளாகவும் உள்ளது. கிரகேரியன் கலண்டர் முறையில் யூலை 22 பை டே யாக அமைகிறது. மேலும் அமெரிக்கத் தேதி முறையில் 3.14.1592 6மணி 53 நிமிடம் 58 செக்கன் π =3.14159265358 என்கிற வடிவைக் கொடுப்பதினால் இந்த நேரத்துளியை உலகின் பைக் கணம் (The "ultimate" pi moment) என்று கணிதத்தில் கூறுவர். இவற்றை எல்லாம் இங்கு எழுதுவது π =3.14159265358 என்பதை மனதில் வைத்திருப்பதற்கான உத்தியாகவே.! பை பை (Bye .. Bye )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JR PRINT

57 Boundary Road
Walthamstow London E17 8NQ

Letter Heads
Visiting Cards
Rubber Stamps
Wedding Cards
Tamil Banners
Cake Boxes
Shorteat Boxes
Colour Printing
Raffle Tickets
Photocopying
Translation
Competitive Prices

Compliment Slips
Souvenirs & Invoices
Invitation Cards
Signboards, Leaflets
Birthday Cards
Rich Cakes
Shorteat Bags
Arangetram Books
Laminating
Rubber Stamps
Translation Services
Fast & Reliable Services

Full Colour Printing

Call us for a Quotation

எங்கள்
இணையத்தளத்தளத்திற்கு
விஜயம் செய்யுங்கள்
எமது சேவைகளின்
விபரத்தை அறிவீர்கள்.

**Tel: 020 8503 6643**

Web: www.jrprint.com

Fax: 020 8281 3879
Mob: 07956 963 470

E-mail: contact@jrprint.com

*Visit our website and view the range of services*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# get a fresh start and reduce monthly outgoings now!

**FREE SURVEY**
Refunded on Completion

# Shalom Mortgage Centre

## DEBT CONSOLIDATION

* **Pay off all your debts, including store cards, credit cards , loans, bank loans etc, Into one easy monthly repayment, even leaving cash to spare!**
* **Can be done with a loan or remortgage, you choose.**
* **Even if you have arrears we can pay those off too, giving you a fresh start!**
* **Borrow from £5000 to £1 million over 5 to 30 years, you choose.**

Nb : Think carefully before, securing other debts against your home. Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage. Please be aware that the reduction of monthly payments by consolidating loans is likely to increase your total costs and repayment term.




## UNUSUAL PROBLEMS?

* **Marital / Partner splits.**
* **Older borrowers / retired or not.**
* **Bankruptcy / IVA discharges.**
* **Court orders / cautions / charging orders dealt with.**
* **Move and keep your current property.**
* **Council flat remortgages /flats above shops.**
* **Equity transfer / family sales.**

## NEW! BUY TO LET

* **Arrears CCJs accepted**
* **Remortgage and purchase**
* **Unusual properties**
* **Capital raise to increase portfolio**



## REMORTGAGE & PURCHASE

* **Mortgage Arrears.**
* **CJ's.**
* **Defaults.**
* **No proof if income.**
* **Reduce your monthly outgoings.**
* **Remortgage up to 90% of value of the property.**
* **Repossessions stopped.**
* **1st time buyer up to 90% with no proof of income.**
* **Self-employed no accounts required up to 90%**

## SECURED LOANS

* **Borrow from £5,000 to £100,000.**
* **No proof of income on some schemes.**
* **Bad credit / arrears consolidate your existing debts in a single monthly payment and cut your outgoings by up to 50%.**
* **Loans for any purpose.**

365 Ripple Road
Barking, Essex IG11 9PN
Tel: 020 8591 8765
Mob: 079 3017 5031
Fax: 020 8591 9890
info@shalomproperties.co.uk
www.shalomproperties.co.uk

Printed by JR Print Tel: 020 8003 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org